Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

இலவசப் பிரதி

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-1575)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 25 (22.10.2003) புதன்கிழமை இதழ்:22

# செய்தியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம்; ஆராய நேற்று முத்தரப்புச் சந்திப்பு!



சந்திப்பில் கலந்துகொண்ட யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா கண்காணிப்புக்குழு அதிகாரியுடன்.

யாழ். குடாநாட்டில் செய்தி சேகரிக்கச் செல்லும் செய்தியாளர்கள் தாக்கப்படுவது தொடர்பாக ஆராய, முத்தரப்புச் சந்திப்பு நேற்று யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பில், இராணுவத்தினர் தரப்பில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா, பலாலி இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த கேணல் அல்விஸ் ஆகியோரும், பொலிஸ் தரப்பில் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் விதாரணகே, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லயனல் ஜெயசேகரா ஆகியோரும்,

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர என்.கதிர்காமத்தம்பி, செயலாளர் சதீஸ், உறுப்பினர் இ.தயாபரன் ஆகியோரும், கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியும், கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பில் யாழ். குடாநாட்டில் செய்தி சேகரிக்கச் செல்லும் செய்தியாளர்கள்(10 ஆம் பக்கம் பார்க்க)

# நிமலராஜன் படுகொலைக்கு அரசியல் கட்சியே காரணம்!

## யாழ். இராணுவத் தளபதி சரத் பொன்சேகா

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை ஒரு அரசியல் படுகொலை. இந்தச் சம்பவத்துக்கு அரசியல் கட்சித் தலைவர்களே காரணம் என அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நேற்று யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடமபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவத்தால், அவரது நண்பர்களாகிய நீங்கள் மனக்கவலை அடைந்துள்ளீர்கள். இதனை எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

ஆனால் இந்தப் படுகொலை அரசியல் ரீதியான கொலையாகும். தென் இலங்கையிலுள்ள சில அரசியல் கட்சிகளும், அரசியல் தலைவர்களும், மறைமுகமாகச் செய்த அரசியல் படுகொலை இதுவாகும்.

அரசியல் ரீதியான மாறுபாடுகள் காரணமாகவே இந்தப் படுகொலை நடந்துள்ளதை சம்பவம் தொடர்பாக கிடைத்துள்ள அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்த சரத்பொன்சேகா, நிமலராஜன் படுகொலைக்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு இராணுவம் பொறுப்பல்ல எனக் கூறினார்.(111,202)

# முக்கிய பாதுகாப்பு விவகார ஒப்பந்தங்களில் இந்திய - இலங்கை பிரதமர்கள் கைச்சாத்து!

## பாதுகாப்புச் சூழலில் முக்கிய மாற்றம் ஏற்படுமாம்

(புதுடெல்கி)

**இலங்கையும் இந்தியாவும் நெருங்கிய பாதுகாப்பு ஒத்துழைப்புக்களுக்கு வழிவகுக்கும் இரண்டு முக்கியமான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளன. இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயுடன் நேற்று இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார்.**

இந்த ஒப்பந்தங்கள் இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளின் பாதுகாப்பு நிலவரங்களில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மையில் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட பொருளாதார உடன்படிக்கையிலிருந்து, தற்போது செய்யப்பட்டுள்ள பொருளாதார உடன்பாடு மிகவும் மேம்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உடன்பாட்டின்படி - இரு நாடுகளுக்குமிடையேயான வான் பரப்பைப் பயன்படுத்துதல், போக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தீர்வுயோசனை நியாயபூர்வமாக இருக்கும்!


## இந்திய அரசாங்கம் நம்பிக்கை தெரிவிப்பு

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே தற்போது தேக்கநிலை காணப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தீர்வை இந்தியா வரவேற்கும். இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு அளித்த யோசனைகளுக்கு விடுதலைப் புலிகளின் பதில் நியாயமானதாகவும் விரிவானதாகவும் இருக்குமென இந்தியா எதிர்பார்க்கின்றது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான மூன்று நாள் விஜயத்தின் முடிவில், நேற்று இரு நாடுகளும் இணைந்து 41 பக்கத்தில் வெளியிட்ட கூட்டறிக்கை (10 ஆம் பக்கம் பார்க்க)

# பின்லாந்து தூதுவருடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!

## நேற்று கிளிநொச்சியில் நடந்தது



தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின்போது பின்லாந்துத் தூதுவர்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் - பின்லாந்து நாட்டுத் தூதுவர் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். நேற்றுக்காலை 8 மணிமுதல் 9 மணிவரை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

பின்லாந்து நாட்டின் சார்பில் - இலங்கை இனவிவகாரம் மற்றும் தற்போதைய நிலைப்பாடு தொடர்பான தகவல்களைத்(10 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒரு சூலில் 4 பிள்ளைகள் பிரசவம்!

பெண் ஒருவர் நான்கு குழந்தைகளை ஒரேசூலில் பிரசவித்த சம்பவம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிகழ்ந்தது. இது வைத்தியசாலை வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுவே வைத்தியசாலையில் இடம் பெற்ற முதல் நிகழ்வாகும். இதற்கு முன்னர் இந்த வைத்தியசாலையில் மூன்று பிள்ளைகளை பிரசவித்த வரலாறே உண்டு.

மட்டக்களப்பு - பாவற்கொடிச் சேனையைச் சேர்ந்த கதிர்காமப் போடி மலர் என்ற கர்ப்பிணித் தாய்க்கு நேற்று நண்பகல் முதலாவது பெண் குழந்தை 12.27 மணிக்கும், நான்காவது பெண்குழந்தை 12.43 மணிக்கும் பிரசவமாகியுள்ளது.

இந்தக் குழந்தைகள் நிறை (10 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தினரை அகற்றி மாணவர்களின் கல்விக்கான சூழலை உருவாக்க வேண்டும்

## சரத் பொன்சேகாவிடம் இளம்பரிதி கோரிக்கை

உயர்பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரையும், பாடசாலைகளுக்கு அருகில் காவலரண்களை அமைத்துள்ள இராணுவத்தினரையும், அங்கிருந்து அகற்றி - மாணவர்களின் கல்வி ஆற்றலுக்கும், ஆசிரியர்களின் கற்பித்தலுக்கும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

இவ்வாறு, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் .ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் கோரிக்கை விடுத்தார்.

யாழ். மாவட்ட அரசியற்துறையினருக்கும் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான மாதாந்தச் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297

0712348888 0712349999 074512666 012360290 012360291

email . jaffna @ expoavi . com. (சி -1620)

எக்ஸ்போஎயார் வான் வெளியில் உங்கள் தோழன்...

# திறந்த பல்கலை பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

இலங்கைத் திறந்த பல்கலைக் கழக இறுதி ஆண்டுப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தோர் விபரங்கள் பாடரீதியாக தரப்படுகின்றது.

**1) தொழில்நுட்ப மாணிப்பட்டம் (பொறியியல்)**

சி.வாசுதேவன், தி.சுகுமாரன், எம்.யோகேஸ்வரன், ஆர்.சிறீதரன்

**2) மானிடவியல் சமூக விஞ்ஞான பீடம்**

**சமூக விஞ்ஞான கலைமாணிப் பட்டம் 2002,2003**

வ.பத்மநாதன், சி.சந்திரசேகரம், ஆர்.தியாகலிங்கம்,

**3) கலைமாணிப்பட்டம் சட்டக் கொள்கை**

கே.செல்வேந்திரன்

**4) முகாமைத்துவமாணிப் பட்டம் 2002,2003**

**இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவு**

கே.சதாசிவம், ஏ.சிவனேசராஜா திருமதி எம்.தில்லைநாதன், எல்.எவ்.செபஸ்தியாம்பிள்ளை

**5) விஞ்ஞானமாணிப்பட்டம் (2002)**

**இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு**

எஸ்.பி.ஜெயக்குமார், எஸ்.பிரதீபா, பி.ரி. நவனீதக் கிருஸ்னன்,

**இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவு**

எஸ்.கவிதா, ஈ.என்.தங்கராஜ், எஸ்.கலாதேவி, எல்.ஏ.பிராங்ளின் செல்வி.கே.மார்க்கண்டு, கே.வாகினி, ஏ.சுதாமதி, திருமதி.கே. ரட்ணகலா, செல்வி.எஸ்.எஸ். ராஜ சிங்கம், எஸ்.சுதர்சினி, செல்வி.எவ் ஆர். அருள்ஞானம், செல்வி.ஆர். பாலசுந்தரம், பி.தர்மினி, கே.கௌரி, செல்வி. ரி.தருமகிட்ணர், வி.விஜய லக்மி, பி.ஜெகநாதன்,

**விஞ்ஞானமாணிப் பட்டம் 2002 (பழையபாடத்திட்டம்)**

பி.எம்.முரளிதரன்,

**6) தாதியர் பட்டத் திட்டம்**

**இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு)**

ஆர்.தேவாமிர்ததேவி

## வருடாந்த பரிசளிப்பு விழா

சுழிபுரம், காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின், வரு டாந்த பரிசளிப்பு விழா 2.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

பாடசாலையின் அதிபர் நா.தன பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக சமூதாய மருத்துவத்துறைத் தலைவர் கலாநிதி என்.சிவராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், வைத்திய கலாநிதி எஸ்.சிவகணேசன், கலாநிதி தாரணி சிவகணேசன், ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வர்.


நிறஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், சங்கீதா நடித்த

அலெக்சாண்டர்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

WAR LOCK -II

(சி-1618)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்றும் நாளையும்

எம்.ஜி.ஆர், சரோஜாதேவி நடித்த

எங்கவீட்டுப்பிள்ளை

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

24 ஆம் திகதி முதல்

பிதாமகன்

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1619)

தீபாவளி திருநாளை முன்னிட்டு...

Carina Brassieres

வாங்கும் சகல வாடிக்கையாளர்களுக்கும் அளப்பரிய பெறுமதியான பரிசுகள்

மேலும் விபரங்களுக்கு நாடுங்கள்

FREE

ஸ்ரீமுருகன்

FREE

303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

T.P. No: 021 222 5392

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

இச் சலுகை 22, 23, 10.2003.

இரு தினங்கள் மட்டுமே.

(சி-1712)


## நூல் அறிமுகம்

**ஒரு பேராசிரியரின் வாழ்க்கையும் கல்விச் சிந்தனைகளும் (சுயசரிதை)**

ஆக்கியோன் :- **பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்**
*(தென்கிழக்கு பல்கலைக்கழகம்)*

இடம் :- நெல்லை முருகன் திருமண மண்டபம்

காலம் :- 2003.10.25 சனிக்கிழமை மு.ப.10 மணி

தலைமை :- **திரு.க.அம்பலவாணர்**
*(கோட்டக் கல்விப் பணிப்பாளர் கரவெட்டி)*

பிரதம அதிதி :- **திரு இ.த.விக்னராஜா**
*(யாழ்.மாவட்ட நீதிபதி)*

கௌரவ அதிதி:- **திரு.இ.தயா**
*(வடமராட்சி அரசியற்துறை பொறுப்பாளர்)*

அறிஞர்களின் சிறப்புரைகளும், நலவுரைகளும் இடம்பெறும்.

**கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்க கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்**

பிரதி அன்பளிப்பு ரூபா.250 ஆகும். பிரதிகள் மண்டபத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-1708)

## யாழ்ப்பாணத்தில் தீபாவளித் திருநாளன்று குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் வயலின் இசை விருந்து



உலகப் புகழ்பெற்ற இசை மேதை வயலின் சக்கரவர்த்தி குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் வயலின் இசை விருந்து தீபாவளித் திருநாளன்று (24.10.2003) மாலை 5 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடை பெறும்.

"தங்கமதில் வைரத்தைப் பதித்தாற்போன்று தன் நெஞ்சில் இசையினையே பதித்து வைத்து"

வயலின் என்ற அற்புத இசைக்கருவியில் பத்து விரல்களும் விளையாடப் பயிற்சி பெற்று நாதப்பிரம்மமாக வாழ்ந்து இசை மழையைப்பொழியும் குன்னக்குடி வைத்தியநாதனின் இசைவிருந்தினைக் காண அனைத்து இசைப்பிரியர்களையும் திரண்டுவருமாறு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினர் அன்புடன் அழைக்கின்றார்கள்.

(சி-1716)

## நமது ஈழநாடு நடாத்தும்

**5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கு 2003**

விபரங்கள் வெகுவிரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்.

அனுசரணை வழங்குவோர்

ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூடர்ஸ்

SEYLAN BANK LIMITED செலான் வங்கி டிக்கிரி கணக்கு

இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்


SHARP

Superior Japanese Technology

எமது வாடிக்கையாளர்களே!

புதிய ஒரு தொகுதி கையிருப்புக்கள் வந்துவிட்டன

உங்களது பழைய கறுப்பு / வெள்ளை (Black & White) அல்லது கலர் தொலைக் காட்சியை எங்களிடம் தந்து புத்தம் புதிய ஷார்ப் (SHARP) தொலைக்காட்சி ஒன்றை இன்றே எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

ரூபா 10 000/= வரைக்கும்

விஷேட கழிவுடன் அதி உன்னத யப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய தொலைக்காட்சியை 5 வருட உத்தரவாதத்தில் இன்றே ஷார்ப் (SHARP) வாங்குங்கள்.

தாமதித்தால் தோல்வி நிச்சயம். ஏனைய பொருள்களுக்கு இம் மாதம்

விஷேட கழிவு விலையில்

விபரங்களுக்கு :

முகாமையாளர்

பிறவுண் அன்ட் கம்பனி

பிறவுண்ஸ் காட்சியறை

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

T.P: 021-2225150, 0777-110791

(சி-1710)

# பிரபாகரனின் பிறந்த தினத்தன்று தமிழீழத்தை அமைக்கும் ஒப்பந்தமாம்!

## மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்ததினத்தில், தமிழீழத்தை அமைக்கும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழம் அமைப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் - பொலிஸ் அமைப்பது, தேசியகீதத்தை மாற்றுவது தொடர்பான காரணங்களை விளக்குகின்ற கருத்துக்கள் அதில் குறிப்பிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# முஸ்லிம்களைத் தனித்தரப்பாக அரசும் புலிகளும் அங்கீகரித்துள்ளனர்

## நாடாளுமன்றில் ஹக்கீம் பேச்சு

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவதற்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஏற்கனவே அங்கீகாரம் அளித்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம்கள் தனித்தரப்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவது தொடர்பாக நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றும்போதே, ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச சமூகமும், இலங்கையின் அரசியல் கட்சிகளும் - முஸ்லிம்கள் தனித்தரப்பு என்பதை வலியுறுத்திவருகின்றன.

திம்பு பேச்சுவார்த்தைகளின் போதும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போதும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் - முஸ்லிம் தரப்பு மூன்றாம் தரப்பாக பங்குபற்றுவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன.

அப்போது முஸ்லிம் கட்சி தனித்த ஒரு அரசியல் கட்சியாக இருக்கவில்லை. அதனால், அப்போது முஸ்லிம் தரப்பினர் என்ற ஒரு வகையில் பேச்சுக்கள் இடம்பெறவில்லை. ஆனால், தற்போது அவ்வாறான ஒரு நிலைமை இல்லை.

முஸ்லிம்களுக்கென ஒரு தனியான கட்சி உருவெடுத்துள்ளது. எனவே, முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என, ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (01)

# பஸ்ஸில் பயணம் செய்த இருவர்; மொரட்டுவவில் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

சொகுசு பஸ் ஒன்றில் பயணம் செய்த இரு இளைஞர்கள், மொரட்டுவவில் வைத்து இனந்தெரியாத நபரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அம்பலாங்கொடவிலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த இளைஞர்களே, கடந்த ஞாயிற்றுக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அதே பஸ்ஸில் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணஞ்செய்த ஒருவரே இந்த இரு இளைஞர்களையும் பிஸ்டல் ஒன்றினால் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தக்கொலைக்கும், பாதாள உலகக் கும்பலுக்கும் இடையில் தொடர்பு இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

# புலிகள் - கூட்டமைப்பு சந்திப்பு இன்று; மலையகத்தலைவர்களுடனும் பேச்சு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையிலான சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து, நாளை மலையக மக்கள் முன்னணியினைச் சேர்ந்த சந்திரசேகரன், இராதாகிருஷ்ணன் ஆகியோர் விடுதலைப்புலிகளைச் சந்தித்து பேசவுள்ளனர். விடுதலைப் புலிகள் 24ம் திகதி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், செல்லச் சாமி ஆகியோரையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசனையும் சந்திப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கச்சதீவை மீளப்பெற நடவடிக்கை எடுக்குமாறு வாஜ்பாயிடம் கோரிக்கை

(கொழும்பு)

கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெறுவதற்கு இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழகத் துணைத் தலைவர் வேலாயுதன் தெரிவித்துள்ளார்.

1970 களில் இலங்கையிடம் கையளிக்கப்பட்ட கச்சதீவுப் பகுதியில்- தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களில் இருந்து மீனவர்களைப் பாதுகாக்க ஒரேவழி, கச்சதீவை மீளப்பெறுவதுதான் என்று தமிழக பாரதீய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் வேலாயுதன் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவின் மீதான உரிமை மட்டுமே இலங்கை அரசுக்கு உள்ளது. இப்பகுதியில் மீன்பிடிப்பதற்கு தமிழக மீனவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது.

ஆனால், தமிழக மீனவர்கள் கச்சதீவில் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வருவதால், இந்தப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு இந்தியா கச்சதீவை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதேயாகும்.

இதற்கு பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

# ஐ.தே.க.வின் செயற்பாடுகளை மறுசீரமைக்க; பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவசர நடவடிக்கை!

## பாரிய பேரணியை நடத்தவும் தீர்மானம்

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவின் செயற்பாடுகளை மறுசீரமைக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துவருகிறார்.

கட்சித் தலைமையகத்தின் செயற்பாடுகளை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு பணியாற்றும் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

கட்சித் தலைமையகச் செயற்பாடுகளை மறுசீரமைத்து, பொதுமக்களுடனான உறவுகளை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கேற்ப நடவடிக்கைகளை எடுக்கும்படி - கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களிடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான விஜயத்தை ஆரம்பிக்க முன்னர் இது தொடர்பாகக் கட்சியின் முக்கிய பிரமுகர்களுடன் ஆராய்ந்ததாகவும் தெரியவருகிறது.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும், பொதுமக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காகப் பேரணியொன்றை நடத்தவும் தீர்மானித்துள்ளனர்.

இந்தப் பேரவை ஐக்கிய தேசிய முன்னணியை அரசாங்கத்தின் 700 நாள் ஆட்சியை நினைவுகூரும் வகையில் அமைந்திருப்பதுடன், சிங்களப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட சமாதான சூழலையும் பொருளாதார வளர்ச்சியையும் பிரசாரப்படுத்தும் வகையில் அமைந்திருக்கும் என்றும் தெரியவருகின்றது.

இதேவேளை, அடுத்த மாகாண சபைத் தேர்தல்களில் முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும், இளைஞர்களுக்கும் வேட்பாளர் பட்டியலில் முன்னுரிமை கொடுக்கவும் ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது குறிப்பிடத்தக்கது.

# களுத்துறையில் ஊர்காவற்படைகளுக்கு பாரிய பயிற்சி முகாம் அமைக்கத் திட்டம்!

(களுத்துறை)

களுத்துறை - சேருவிர பகுதியில் முன்னர் இயங்கிவந்த சிறுவர் பாடசாலை நீண்ட காலமாக மூடப்பட்டிருந்தது. இப்பாடசாலைக் கட்டிடத்தோடு அமைந்த ஐந்து ஏக்கர் பகுதியைப் புனரமைத்து, ஊர்காவற்படைக்கான பாரிய பயிற்சிமுகாமொன்றை அமைக்க உள்துறை அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வாரம் ஆரம்பித்த இவ் ஊர்காவற்படைக்கான பயிற்சி முகாமின் புனரமைப்புப் பணிக்கென முப்பது மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது. இரண்டு மாடிக் கட்டடமாகப் புனரமைக்கப்படவுள்ள இப் பயிற்சி முகாமில், தங்குமிட வசதிகளும் கணினிப் பயிற்சி வகுப்பறைகளும் அமைக்கப்படவுள்ளன. ஒரு தருணத்தில் 100 பேர் தங்கிப் பயிற்சி பெறத்தக்க இப்பயிற்சி முகாமில், 100 பேர் கட்டம் கட்டமாகப் பயிற்சிபெற்று வெளியேறுவார்கள் என்றும், அடுத்த வருட நடுப்பகுதியில் இம்முகாம் செயற்பட ஆரம்பிக்கும் என்றும் ஊர்காவற்படையின் பொறுப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அதிபர் திலக் வனிகசேகர தெரிவித்தார்.

### உதைபந்தாட்டப் போட்டி

யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான சிநேக பூர்வமான உதைபந்தாட்டம் - இன்று பி.ப 2.15 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் - 14,16,18 மற்றும் 20 வயதிற்குட்பட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன.

# தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம் ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட கோட்ட, பிரதேச ஊரகப் பேராளர்கள் சங்கம நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு - யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ. சிறில் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையின் எதிர்காலத்திட்டங்கள், மக்கள் நலன்சார் நடவடிக்கைகள், தேசிய விழாக்கள், மற்றும் ஊரகம், கோட்ட ரீதியாக மக்கள் கட்டமைப்புக்களைப் புனரமைத்தல், அதனை வழிநடத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கான நடவடிக்கைகளை இனங்காணுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# 7 முன்னாள் அமைச்சர்கள் ஐ.தே.கவுக்கு தாவுவர்!

## கொழும்புப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தின் போது, பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏழு முன்னாள் அமைச்சர்கள், ஐக்கியதேசியக் கட்சியில் இணையலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஏழு பேரில் - நான்கு பேர், வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது, ஐக்கியதேசியக் கட்சி சார்பில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மிகுதிப்பேர் - எதிர்க் கட்சியின் வரவு செலவு திட்ட விவாதத்தின் போது, நேரம் ஒதுக்காவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சிக்கான நேர ஒதுக்கீட்டு விவாதத்தில் பங்கு பெறுவார்கள் என்று, கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# மன்னார் மாவட்டதில் புதிய நீதிமன்று திறப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் புதிய நீதிமன்றம் ஒன்று ஒன்றரைக் கோடி ரூபாசெலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நிர்மாணிக்கப்பட்ட இந்த நீதிமன்றத்தைத் திறந்துவைத்தார்.

மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா தலைமையில் நடைபெற்ற இந்த நீதிமன்ற திறப்புவிழாவில், நீதித்துறை ஆணையாளர் பு.சி.ஜயதிலக பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த பல நீதிவான்களும், வழக்கறிஞர்களும் கலந்துகொண்டனர். (01)

# நெதர்லாந்து அமைச்சர் கொழும்புக்கு வருகிறார்!

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை, ஊக்கப்படுத்தும் நோக்குடன், நெதர்லாந்து அமைச்சர் இங்கு விஜயம் செய்யவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரிலேயே இவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெதர்லாந்து அபிவித்தி அமைச்சர் திருமதி அக்னஸ் வான் அர்டென் எவ்வன்டர் ஹோவனே - அடுத்த மாதம் இங்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் அடுத்த மாதம் மூன்றாம் திகதியிலிருந்து, 5 ஆம் திகதிவரை- இலங்கையில் தங்கியிருப்பார். சமாதான முயற்சிகளுக்குப் பலமான ஆதரவைத் தெரிவிக்கும் நோக்கிலேயே தனது இலங்கை விஜயம் அமையும் என, அவர் தெரிவித்தார்.

# அரச ஊழியரின் வேலைநிறுத்தத்தால் அன்றாட வாழ்க்கை பாதிக்கவில்லை!

(கொழும்பு)

அரச ஊழியர் சம்பள உயர்வு கோரி, நேற்று நடத்திய போராட்டத்தினால் மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதாகப் பாதிப்படையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன இந்தப் போராட்டத்தில் மக்களைக் கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ரயில்வே சேவைகள், தபாற் சேவைகள், வைத்தியசாலை சேவைகள் ஆகியன ஓரளவே பாதிப்படைந்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இந்தப் போராட்டத்தை ஒழுங்குசெய்த ஜே.வி.பி.- இந்தப் போராட்டத்திற்கு தனக்கு முழு ஆதரவு கிடைத்ததாகவும், போராட்டம் வெற்றியளித்துள்ளதாகவும், தெரிவித்துள்ளது. (01)

# அரசின் கல்விக் கொள்கைகளின் காரணமாகவே தமிழ் மாணவர் கல்வி திட்டமிட்டு அழிக்கப்பட்டது

## நூல் வெளியீட்டு விழாவில் மாவை சேனாதிராஜா

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் - தமது கல்வியைச் சுதந்திரமானமுறையிலே கற்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது பாடசாலைகள் மீட்கப்பட வேண்டும் என, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ்.உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'வித்தகம்' நூல் வெளியீட்டு விழாவில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எமது தமிழினத்தின் கல்வி - போரின் காரணமாக அழிவடைந்ததை விட, அரசின் கொள்கைகள் காரணமாக அழிந்த சந்தர்ப்பங்களே ஏராளம். தரப்படுத்தல், வெட்டுப்புள்ளிகள் எனப் பல்வேறு வகையிலும் திட்டமிட்டு, தமிழ் மாணவர்களுடைய கல்வி அழிக்கப்பட்டது.

இன்று மேற்குலக நாடுகள் கலவி, தொழில்நுட்ப ரீதியில் பல மடங்கு முன்னேறியுள்ளன. அங்கு சாதாரணமான சிகை அலங்கரிப்பு, ஆடை அலங்காரம் என்பவற்றிற்கே பட்டப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இங்கு பல்கலைக் கழக அனுமதியை ஓரிரண்டு புள்ளிகளால் தவறவிட்ட மாணவர்களில் பலர், அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் தவிக்கிறார்கள். அத்தகைய மாணவர்களைக் கவனத்திற் கொண்டு, இத்தகைய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும். அத்தோடு, அவை சிறந்தமுறையிலே தமது சேவையை வழங்கக்கூடியவையாகவும் இருக்க வேண்டும்.

எமது மாணவர்கள் மத்தியிலே அதீதமான திறமைகள் மறைந்துள்ளன. புலம்பெயர்ந்து வாழும் எமது தமிழ்மக்களின் பிள்ளைகளில் பலர்- இன்று அங்குள்ள பிள்ளைகளை விட, கல்வித்துறையிலே முன்னணியிலே திகழ்கிறார்கள்.

எமது மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த அறிவுகள் நிறையப் போதிக்கப்பட வேண்டும். இதற்கு விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் முதலில் அது தொடர்பான கல்வியைப் பெற்று பின், மாணவர்களுக்குப் புகட்ட வேண்டும்.

இந்தத் தொழில்நுட்ப உயர் கல்வி நிறுவனத்திற்கு நிரந்தரக் காணியில்லை. அதனைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இன்று சமாதானத்திற்காக விடுதலைப் புலிகள் - சர்வதேசமெங்கும் சென்றுவருகின்றார்கள். அதேவேளை, சில தீயசக்திகள் போரை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். மக்கள் போராட்டங்களின் மூலம்தான் அவர்களின் நடவடிக்கைகளை முறியடிக்கவேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் எமது மக்களின் வீடுகள், எமது கல்விச் சொத்தான பாடசாலைகள் எல்லாம் மூடப்பட்டுள்ளன. அண்மையில் பிரதமர் ரணிலுடன் இது தொடர்பாக நாம் பேசியபோது, இராணுவத்தினரோடு இனி இதுபற்றிப் பேசுவதில் பயனில்லை எனக் குறிப்பிட்டோம்.

அரசியலமைப்பு ரீதியாக, மனிதாபிமானரீதியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். அதற்கும் அரசு தயாரில்லை எனின், மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து, எமது நிலத்தை மீட்கவும் தயங்கமாட்டோம் எனவும் பிரதமருக்குத் தெளிவாகக் கூறியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் -

பெருமளவிலான மாணவர்கள், விரிவுரையாளர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு நிரந்தரமான காணி கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திற்கெதிரான நிரந்தர காணியொன்று பெறப்பட்டுள்ளது. கோப்பாய் பகுதியிலேயே யாழ்.கல்வியியற் கல்லூரி அமைந்துள்ள பகுதிக்கு அருகிலேயே இந்தக்காணி அமைந்துள்ளது.

சேர்.பொன்.இராமநாதனுக்குச் சொந்தமான இந்தக் காணியைத் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையும், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகவே பெறப்பட்டுள்ளது.

சேர்.பொன்.இராமநாதன் நம்பிக்கை நிதியத்தின் பொறுப்பிலிருந்த இந்தக் காணியை நம்பிக்கை நிதியத்தினர் உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்காக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மிகவிரைவில் இந்தப் புதிய காணியில் விடுதி வசதி உட்படப் பல நவீன வசதிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்டுகிறது.

# மின்பிறப்பாக்கி பழுது; அனலைதீவு இருளில்!

அனலைதீவு பிரதேசத்திற்கு இதுவரை மின்னை வழங்கிவந்த இலங்கை மின்சாரசபையின் மின் பிறப்பாக்கி பழுதடைந்தமையால் - இப்பிரதேசம் கடந்த இரு வாரகாலமாக இருளில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்திற்கு - மின்சார சபையினால் மாலை 7 மணிமுதல் 11 மணிவரையும், காலை 5 மணி முதல் 6 வரையும் பகுதிநேர மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த இருவாரங்களாக மின்பிறப்பாக்கி பழுதடைந்த காரணத்தினால், மின்விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திற்கு மீண்டும் மிக விரைவில் மின் விநியோகத்தை ஆரம்பிக்குமாறு, இந்தப் பிரதேசத்தின் சமூக நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன், இங்குள்ள மக்கள் பலர்- வீட்டுமின்வேலைகளைப் பூரத்தி செய்துவிட்டு, மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக காத்திருப்பதாகவும், ஆனால் மின்சார சபையினர் தற்பொழுதுள்ள மின்பிறப்பாக்கியின் வலுக்குறைவாக உள்ளதாகக்கூறி, புதிய மின்னிணைப்புகளை வழங்கமறுத்துவருவதாக, பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (83)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியர் தினவிழாவை பழைய மாணவர் சங்க செயலாளர் திருமதி ஜீ.தவரட்ணம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும், அருகில் பதில் அதிபர் எஸ்.சண்முகநாதன் விழா தலைவர் எஸ்.என்.திருச்செல்வம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## சதுரங்கப் போட்டி

(சுதுமலை)

மானிப்பாய் பரிஸ் லியோக் கழகத்தினரால் கழக எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள சதுரங்கம், கரம் ஆகிய போட்டிகள் இன்றும், நாளையும் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், தமது விபரங்களைப் பாடசாலை அதிபரூடாகக் கழகத் தலைவருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான பயிற்சிகள் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் பயிற்சி ஆசிரியர்களான - வித்தியாதரன், பிரதீபன் ஆகியோரால் வழங்கப்பட்டது. (91)

## மாதாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் மாதாந்தப் பொதுக்கூட்டம் - எதிர் வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில், நீர்வேலி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

## ஆலயங்களில் திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானை கூடததடி மனோன் மணி அம்மன் கோயிலில் கடந்த திங்கட்கிழமை இரவு பெருந்தொகைப் பணம் களவுபோயுள்ளது.

இதேவேளை, சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர் கோயிலுள்ள பிள்ளையார் விக்கிரகம் - கடந்த சனிக்கிழமை காணாமற்போயுள்ளது. இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகளவில் இடம்பெறுவது குறிப்பிடத்தக் கது. (91)

## சதுரங்க வீரர் சிவோதயன் தேசிய அணிக்குத் தெரிவு

கொழும்பில் கடந்த சில வாரங்களாகத் தேசிய சதுரங்க வீரர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிகள் இடம்பெற்றன. இவற்றில் கலந்துகொண்டு, சிறப்பாக விளையாடிய யாழ்ப்பாண சதுரங்க வீரர்- சிவானந்தன் சிவோதயன் தேசிய அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். எட்டுப் புள்ளிகளைப் பெற்று, அணியில் நான்காவதாக இவர் வந்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், சதுரங்கப் பயிற்றுநருமான சிவோதயன், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியுமாவார். கடந்த பத்து வருடங்களாக யாழ்ப்பாண மாவட்ட சதுரங்கப் போட்டிகளில் பங்குபற்றியதுடன், பல போட்டிகளில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளார். சென்ற வருடத் தேசிய சதுரங்க அணியின் குழாமில் **(pool)** இவர் இருந்தமையும், சென்ற வருட சதுரங்க சாம்பியன் நிரோஸ் டி சில்வாவைப் போட்டியொன்றில் தோற்கடித்தமையும் குறிப்பிடத்தக்கது. கொழும்பு இஸ்பத்தான கல்லூரியில் அண்மையில் நிகழ்ந்த சதுரங்கப் போட்டியில், தங்கப்பதக்கத்தைப் பெற்ற இவர், நல்லூரைச் சேர்ந்த டொக்டர் சிவானந்தன் கமலராணி தம்பதிகளின் புதல்வராவார்.


## வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர்: ஜெ.லக்ஷாயினி

முகவரி: சிவன் புதுவீதி, நல்லூர்.

இரண்டாவது அகவையில்



பெயர்: க.பானுஜா

முகவரி: 'சரஸ்வதி வாசம்', அல்வாய் தெற்கு.

ஐந்தாவது அகவையில்



பெயர்: சி.துளசிகா

முகவரி: கோண்டாவில் மேற்கு, நந்தாவில்.

ஆறாவது அகவையில்



பெயர்: ஆ.கிருஷ்ணவேணுகன்

முகவரி: அல்லையம்பதி, துன்னாலை.

எட்டாவது அகவையில்



பெயர்: ரி.சபீனா

முகவரி: ஜேர்மனி.

எட்டாவது அகவையில்



பெயர்: பு.புகழியா

முகவரி: கனடா.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

25 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு வரவு, செலவு, அதிகரிப்பு, குறைவு ஆகிய பதங்களை எழுதுக.

25. சொத்து அதிகரித்தால் .................................. ஆகும்.

26. பொறுப்பு.............................. செலவு ஆகும்.

27. வருமானம் அதிகரித்தால் ............................ ஆகும்.

28. செலவு அதிகரித்தால் .............................. ஆகும்.

29. பொறுப்பு.................................. வரவு ஆகும்.

30. உரிமை.............................. செலவு ஆகும்.

31. இறுதியிருப்புக்கான சரியான இரட்டைப் பதிவு.
1. இருப்புக் கணக்கு வரவு, வியாபாரக் கணக்கு செலவு
2. வியாபாரக் கணக்கு வரவு, இருப்புக் கணக்கு செலவு
3. இருப்புக் கணக்கு வரவு, இலாபநட்டக் கணக்கு செலவு
4. இலாபநட்டக் கணக்கு வரவு, இருப்புக் கணக்கு செலவு

கீழ்வரும் தகவலை 32 வினாவில் இருந்து 35 வினாவரை பயன்படுத்துக

| | | |
|---|---|---|
| காணி கட்டடம் | ரூ. | 75000 |
| சரக்கிருப்பு | ரூ. | 30000 |
| கடன் பட்டோர் | ரூ. | 15000 |
| காசு மீதி | ரூ. | 10000 |

32. மேற்படி தரவிலிருந்து மொத்த பொறுப்பின்பெறுமதி யாது?
1. ரூ. 180000 2. ரூ. 130000
3. ரூ. 125000 4. ரூ. 55000

34. 100% திரவத்தன்மை உடைய சொத்து எது?
1. சரக்கிருப்பு 2. கடன்பட்டோர்
3. காசுமீதி 4. காணி கட்டடம்

35. திரவத்தன்மை குறைந்த சொத்து எது?
1. சரக்கிருப்பு 2. மோட்டார்
3. கடன்பட்டோர் 4. காணி கட்டடம்.

36. இலாபநோக்கற்ற நிறுவனத்தில் சந்தா முற்பணம் ஒரு
1. நடைமுறைச்சொத்து 2. நடைமுறைப் பரிப்பு
3. நீண்டகாலப்பொறுப்பு 4. திரண்டநிதி

37. இலாபநோக்கற்ற நிறுவனத்தின் கொள்ளல் கொடுத்தல் கணக்கு, இலாபநோக்குடைய நிறுவனத்தில் எக்கணக்கை ஒத்தது?
1. இலாபநட்டக் கணக்கு 2. காசுக் கணக்கு
3. வியாபாரக் கணக்கு 4. சந்தாக் கணக்கு

38. இயந்திர பெறுமானதேய்வு ஒரு
1. தொழிற்சாலை மேந்தலை செலவாகும்.
2. நேர் செலவாகும்.
3. பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் செலவாகும்.
4. நிலையநிர்வாக செலவாகும்.

39. சில்லறைக் காசாளரின் ஜனவரிமாத இறுதியாக இருந்த மீதித் தொகை ரூ. 1350. வசக்கடு மீள நிரம்பல் 1650 எனின், சில்லறைக் காசாளனின் ஆரம்பத்தில் இருந்ததொகை யாது?
1. ரூ. 3000 2. ரூ. 1350 3. ரூ. 1650 4. ரூ. 300

40. நிறுவனத்தில் இறுதிக்கடன்பட்டோர் 35000 ரூபாவாகும். ஐயக்கடன் ஏற்பாடு ரூ. 3000 எனின், அறவிடமுடியாத கடனாக ரூ. 5000 பதிவழிக்கப்பட்டது எனக் கருதும்வேளை, ஐயக் கடன் ஏற்பாட்டு 5% எனின் , ஐயக்கடன் மீதி யாது?
1 ரூ. 1000 2. ரூ. 1250 3. ரூ. 3000 4. ரூ. 1500

**மு. சிவப்பிரகாசம் B.B.A(Spl)**
**கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்**

## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

### கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் - 2003

01. அழுக்கத்தை அளக்கப் பயன்படுத்தும் நியம அலகு பின்வருவனவற்றுள் எது?
1. நியூட்டன் மீற்றர் 2. பாஸ்கல் 3. வாற்று 4. யூல்

02. பிறப்புரிமையியலின் தந்தை எனப் போற்றப்படுபவர்?
1. திமித்திரி மெண்டலீவ் 2. கிரகர் மெண்டல்
3. சாள்ஸ் டார்வின் 4. ஜோன் ஜொஹன்சன்.


03. அயடீன் சேர்க்கப்பட்ட உப்பைப் பயன்படுத்துவதால், பின்வரும் எந்த நிலைமை ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்?
1. நீரிழிவு 2. தொண்டைக்கழலை
3. சருமநோய் 4. இதயநோய்

04. பின்வரும் எக்காரணி அதிகரிக்கும்போது, தாவர இலைகளில் இருந்து வளிமண்டலத்துள் விடுவிக்கப்படும் நீராவியின் அளவு குறைவடையும்?
1. மண்ணிரின் அளவு 2. வளிமண்டல ஈரப்பதன்
3. காற்றின் வேகம் 4. சூழல்வெப்பம்

05. பின்வருவனவற்றில் எதில் வேகவிகிதம் ஒன்றைவிடக் குறைவாக இருக்கும்?
1. பாக்குவெட்டி 2. சாவணம்
3. சோடாமூடி திறப்பான் 4. ஒற்றைச்சில்லுவண்டி

06. பொட்டாசியம் மங்கனேற்றின் இரசாயனச் சூத்திரம் $K_2mno_4$ ஆக இருப்பின், கல்சியம் மங்கனேற்றின் சூத்திரத்தைத் தருக?
1. $ca_1mno_4$ 2. $camno_4$
3. $ca(mno_4)_2$ 4. $ca_2(mno_4)_2$

07. பின்வருவனவற்றில் எது ஹெஜிபோமின் இரசாயனக் கட்டமைப்பைச் சரியாகத் தருகின்றது?




08. சடத்துவ வாயுக்கள் பற்றிய கூற்றுக்களுள் பிழையானது?
1. இவை இயற்கையில் ஏருணுமூலக்கூறுகளாகக் காணப்படும்.
2. இவற்றின் வலுவளவு பூச்சியமாகும்.
3. இவை ஏனைய மூலகங்களுடன் அயன்பிணைப்பில் ஈடுபடும்.
4. இம் மூலகங்களின் இறுதிச் சத்திமட்டம் எப்போதும் நிரம்பியிருக்கும்.

09. 50 கி.கி திணிவுடைய ஒரு பொருளில் $4ms^{-2}$ எனும் ஆர்முடுகலை ஏற்படுத்தவல்ல விசை பின்வருவனவற்றுள் எது?
1. 100n 2. 12.5n 3. 200n 4. 800n

10. கீழே தரப்பட்டுள்ள அயன்களுள் எந்தெந்த அயன்களின் இலத்திரன் நிலையமைப்பு சோடியம் அயனின் $(Na^+)$ இலத்திரன் நிலையமைப்புக்குச் சமமானது?
a. $Cl^-$ b. $O^{2-}$ c. $Mg^{++}$ d. $Ca^{++}$
1. a யும் b யும் 2. b யும் c யும்
3. a யும் c யும் 4. b யும் d யும்

11. குருதியிலுள்ள வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் அசாதாரணமாகப் பெருக்கமடைவதால் ஏற்படும் நோய் நிலைமை?
1. ஈமோபீலியா 2. இலூக்கேமியா
3. துரம்போசிஸ் 4. அனீமியா

12. வெட்டுத்துண்டங்களின் மூலம் தாவர இனப்பெருக்கலின்போது, வேர்வளர்ச்சியைத் தூண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்?
1.யூரியா 2. தொலமைற் 3. றூட்டோன் 4. மலத்தியோன்

13. இறப்பர் மரத்தில் பாலை உற்பத்தி செய்யும் பாற்கலன்கள் பின்வரும் எவ்விழையத்தில் இருந்து வியத்தமடைந்தது?
1. காழ் இழையம் 2. உரிய இழையம்
3. கலன்கட்டு மாறிழையம் 4. மையவிழையம்

(தொடரும்...)

**சற்குணநாதன் B.sc (Agri) Dip.in-Ed.**
**யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி**

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்



## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2003

### பிறந்தநாள் அழைப்பிதழ்

அன்புடையீர்,

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 24.11.2002 அன்று பிற்பகல் 5 மணிக்கு எனது பிறந்த நாள் வைபவத்தைச் சிறப்பாக வீட்டில் கொண்டாடவுள்ளேன். அத்தருணம் தாங்களும் வருகை தந்து, விருந்துபசாரத்தில் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

இல 35/1 A, பெரேரா லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06

இப்படிக்கு
தங்கள் நல்வரவை நாடும்
க. மயூரன்.

மேலேயுள்ள அழைப்பிதழைக் கவனமாக வாசித்தபின், இலக்கம் 01 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) பிறந்தநாள் வைபவத்தைச் சிறப்பாகக் கொண்டாடியவர் யார்?
..................................................

(2) இவரின் பிறந்தநாள் வைபவம் எப்போது நடைபெறவுள்ளது?
..................................................

(3) பிறந்தநாள் வைபவம் எங்கே நடைபெறவுள்ளது?
..................................................

(4) பிறந்தநாள் என்பதை ஆங்கிலத்தில் எழுதுக?
..................................................

(5) பிறந்தநாள் வைபவத்தை மிகச்சிறப்பாகக் கொண்டாடுபவர் ஓர் ஆணா அல்லது பெண்ணா? காரணம் தருக.
..................................................

ஒத்தசொல் தருக.

(6) வீடு..................................................

(7) பணிவு..................................................

(8) பிரித்தெழுதுக.
விருந்துபசாரம் = ..................+..................


(9) பிறந்தநாள் கொண்டாட்டம் விடுமுறை நாளிலா, கிழமை நாளிலா நடைபெறுகிறது?
..................................................

(10) "கொண்டாடவுள்ளேன்" என்பது குறிக்கும் காலம் யாது?
..................................................

இல 11 முதல் 20 வரையுள்ள வினாக்களைக் கவனமாக வாசித்து விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(11) மிகச்சிறிய எண்ணை வட்டமிடுக.
345, 453, 560, 290, 605

(12) 9875 = 9000 + 800 + ☐ +5. வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

(13) 

இவ்வெண்சட்டம் காட்டும் எண் யாது?
..................................................

(14) 8, 16, 24, 32, ☐ , ☐ இவ்வெண் கோலத்தில் வெற்றுக்கூடுகளில் வரவேண்டிய இரு எண்களையும் எழுதுக?
..................................................


(15) 3294 என்ற எண்ணில், இலக்கம் மூன்றின் இடப்பெறுமானம் யாது?
..................................................

(16) 4, 9, 2, 7 என்ற எண்களைக் கொண்டு அமைக்கக்கூடிய மிகச்சிறிய எண யாது?
..................................................

(17) XXV என்ற உரோமன் எண்ணை, இந்து அராபிய எண்களில் எழுதுக?
..................................................

(18) 3/4 ஐ தசம எண்ணில் எழுதுக?
..................................................

(19) 4m 25cm நீளமான நாடாவில் 1m 15cm துண்டு வெட்டப்பட்டது. பின்னர் எஞ்சியுள்ள பகுதியின் நீளமென்ன?
..................................................

(20) 

8.30 மணியை இம்மணிக்கூடு முகப்பில் வரைந்து காட்டுக?

இல. 21 முதல் 25 வரையுள்ள வினாக்களில் மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

(21) இலங்கையிலுள்ள மிக உயர்ந்த மலை.
1. சிவனொளிபாதமலை 2. பீதுறுதாலகாலமலை 3. சிகிரியா

(22) நீரில் கரையக்கூடிய பொருட்களில் ஒன்று.
1. மண்ணெய் 2. உப்பு 3. பெற்றோல்

(23) கண்ணுக்கும், காதுக்கும் விருந்தளிக்கும் தொலைத்தொடர்புச் சாதனம்.
1. ரேடியோ 2. பத்திரிகை 3. தொலைக்காட்சி

(24) —|‖— இக்குறியீடு உணர்த்தும் பொருள்
1. மின்குமிழ் 2. மின்கலம் 3. மின்சூள்

(25) சுற்றாடலில் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய கீரை வகைகளில் ஒன்று.
1. பொன்னாங்காணி 2. பருப்பு 3. கத்தரிக்காய்

இல. 26 முதல் 35 வரையுள்ள வினாக்களில் சரியாயின் "சரி" எனவும், பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக.

(26) வெண்கட்டி, கரும்பலகை, துடைப்பம் போன்றன கற்பித்தல் உபகரணங்களாகும். (..........)

(27) தபாலதிபர் புகையிரத நிலையத்தில் கடமையாற்றுகிறார். (..........)

(28) பத்திரிகைகள் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளை வாசகர்களுக்குத் தருவதில்லை. (..........)

(29) தையல் வகைகளில் சோம் தையலும் ஒன்றாகும். (..........)

(30) நாம் வசிக்கும் வதிவிடத்தை உறுதி செய்பவர், தாதி ஆவார். (..........)

(31) சந்திரன் முழுமையாகத் தெரியும் நாள் பௌர்ணமி ஆகும். (..........)

(32) கத்தரிக்கோல் 3 ஆம் வகை நெம்பு கோலாகும். (..........)

(33) நாம் இலகு பொறிகளைப் பாவிப்பது சிறந்தது. (..........)

(34) நிலவழிப் போக்குவரத்துச் சாதனங்களில் கப்பலும் ஒன்று. (..........)

(35) சுத்தமான நீரின் இயல்புகளில் ஒன்று மணமற்றது ஆகும். (..........)

இல. 36 முதல் 40 வரையுள்ள சொற்களை ஆங்கிலத்தில் (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.

(36) Black board ..............................
(37) Monitor..............................
(38) Brother..............................
(39) Train..............................

(40) Woodapple.........................

இல. 41 முதல் 46 வரையுள்ள தமிழ்ச் சொற்களை ஆங்கில மொழியில் (ஆங்கில எழுத்துக்களை) உபயோகித்து எழுதுக.


(41) புத்தகம்.............................
(42) நாளை..............................
(43) நிறம்...............................
(44) ஏழு.................................
(45) மேசை................................
(46) வைத்தியர்............................

பின்வரும் பாடலைப் படித்து இல. 47 - 54 வரையான வினாக்களுக்கு விடை தருக.

வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை
பேருக்கு கொரு நிறமாகும்
சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பின் நிறமொரு குட்டி - வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி

(47) இந்தப் பாடலில் கூறப்படும் விலங்கு எது?
..........................................
(48) இந்தப் பிராணி எந்நிறமுடையது?
..........................................
(49) பூனைக்குட்டிகள் எந்நிறமுடையவை?
..........................................
(50) வீடு என்பதற்கு ஒத்தகருத்துள்ள சொல் எழுதுக?
..........................................
(51) வெள்ளை என்பதற்கு எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?
..........................................
(52) நிறமொரு என்ற சொல்லைப் பிரித்து எழுதுக?
..........................................
(53) பாடலிலுள்ள அஃறிணைப் பன்மைச்சொல் ஒன்றினை எழுதுக?
..........................................
(54) வெள்ளைநிறப் பூனைக்குட்டி ஒன்று வந்தது. அதிலுள்ள எழுவாய் அடைமொழி யாது?
..........................................

இல. 55 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்களிலுள்ள படங்களுக்குப் பொருத்தமான சொல்லை இடங்களில் எழுதுக?

(55)  (56) 

...................... ......................

(57)  (58) 

...................... ......................

இல. 59 முதல் 63 வரையுள்ள வினாக்களில், எழுத்துக்கள் எழுதப்பட்டதுண்டுகளை ஒழுங்கமைப்பதன் மூலம் வினாக்களுக்கு விடை எழுதுக.

(59) ஒரு பறவையின் பெயரை எழுதுக. | ம் | கா | க |
..........................................
(60) ஒரு நகரின் பெயரை எழுதுக. | ம் | ழ் | யா | பா | ப் | ண |
..........................................
(61) ஒரு பெண்பிள்ளையின் பெயரை எழுதுக. | னி | ந | மி | ளா |
..........................................
(62) ஒரு மிருகத்தின் பெயரை எழுதுக. | ம் | ங் | க | சி |
..........................................

(63) பாடசாலையில் பயன்படும் இடத்தின் பெயரை எழுதுக. | ம் | நூ | க | ல |
..........................................

இல. 64 முதல் 68 வரையுள்ள வினாக்களிலுள்ள வெற்றிடங்களை, அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல் கொண்டு நிரப்புக.

(64) கமலா தனது குழந்தையைக் கண்ணை ........................ காப்பதுபோலக் காத்து வந்தாள். (முடி, புருவம், இமை)

(65) ........................ சுகம் தரும் என்பது முதாதையர் வாக்கு. (அசுத்தம், சுத்தம், சுகம்)

(66) ........................ ஒரு பெண் புலவர் ஆவார். (ஔவையார், கம்பர், பாரதியார்)

(67) கருமம் தொடங்கும்போது.................... பார்க்க வேண்டும். (கண்ணீர், கஷ்டம், காலம்)

(68) நாம் ஒவ்வொருநாளும் ........................ இருக்க வேண்டும். (காட்டுமிராண்டியாக, சுத்தமாக, கோமாக)

இல. 69 முதல் 77 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(69) இக்கோலத்தில் அடுத்ததாக வரவேண்டிய உருவை வரைக.

 ..........

(70) ஒரு பாத்திரத்தில் 5 l, 550 ml நீர் இருந்தது. அப்பாத்திரத்தில் மேலும் 3 l, 650 ml நீர் சேர்க்கப்பட்டது. தற்போது அப்பாத்திரத்திலுள்ள நீரின் மொத்த அளவு யாது?
..........................................
(71) இன்று ஞாயிற்றுக்கிழமையாயின் நாளை மறுதினம் என்ன கிழமை?
..........................................
(72) ரூபா 100 ஐ எத்தனை ஐந்து ரூபா நாணயங்களாக மாற்றலாம்?
..........................................
(73) 8071, 7001, 8837, 4925, 4810 இவ்வெண்களை இறங்குவரிசைப்படி எழுதுக?
..........................................
(74) 2 l, 780 ml ஐ மில்லிலீற்றில் எழுதுக?
..........................................
(75) 815 cm ஐ, cm இல் தருக?
..........................................
(76) ஒரு பிள்ளைக்கு 5 பிஸ்கட்டுகள் கிடைக்கக்கூடியதாக, 152 பிஸ்கட்டுக்களைப் பங்கிட்டால், மீதியாக இருப்பது எத்தனை?
..........................................
(77) 1kg தேயிலையின் விலை ரூபா 220.00 எனின், 150g தேயிலையின் விலை யாது?
..........................................

இல. 78 முதல் 82 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(78) யானையின் ஆண் களிறு என்பதுபோல, யானையின் பெண்.
..........................................
(79) ஆட்டின் இளையது குட்டி என்பதுபோல, பனையின் இளையது.
..........................................
(80) கணவனை இழந்த பெண்........................ ஆவாள்.
(81) விரும்பியவற்றைத் தரும் தெய்வீகப் பசு .................... ஆகும்.
(82) நாய் குரைக்கும் என்பதுபோல குதிரை ........................

"நான் ஒரு தபாற்காரன்" என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருப்பதுடன், அந்த வாக்கியத்தின் எழுவாய், பயனிலையும் திருத்தமான முறையில் அமைந்திருத்தல் வேண்டும்.
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................

• (தொடரும்...)

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்



# வணிகக்கல்வியும் கணக்கீடும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண மாதிரிப் பரீட்சை

### பொருத்தமான விடையைத் தெரிக

01. ஆதிகால மனிதன் தேவைகளை எவ்வாறு நிறைவு செய்து கொண்டான்?
1. நேர் உற்பத்தி 2. நேரில் உற்பத்தி
3. பண்டமாற்று 4. பணத்தின் மூலம்

02. மனிதவாழ்வுக்கு அவசியமானவை எவ்வாறு அழைக்கப்படும்?
1. விருப்பங்கள் 2. தேவைகள்
3. வியாபாரம் 4. வணிகம்

03. மனித தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்திசெய்யும் கருமம் எவ்வாறு அழைக்கப்படும்?
1. துணைச்சேவைகள் 2. சந்தைப்படுத்தல்
3. வர்த்தகம் 4. வணிகம்

04. அவுஸ்திரேலியா நாட்டின் பண அலகின் பெயர் என்ன?
1. டொலர் 2. ஸ்ரேலிங் பவுண்
3. பிராங் 4. மார்க்

05. ஒரு லக்ஸ் சவர்க்காரத்தின் விலை 20 ரூபா எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது பணத்தின் எத்தொழிற்பாட்டுடன் தொடர்புடையது?
1. பரிமாற்றுடகம் 2. பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியமம்
3. அளவு கோல் 4. பெறுமானத் திரட்டு

06. தொலைக்காட்சி உற்பத்தி நிறுவனம் - முதியோர் இல்லத்தில் ஒரு தொலைக்காட்சியை இலவசமாக வழங்கியது. இது எவ் வகையான உபாயம் ஆகும்.
1. பிரசித்தம் செய்தல் 2. விளம்பரம்
3. விற்பனை மேம்படுத்தல் 4. தனிப்பட்ட விற்பனை

07. 1 ஆம் நிலை உற்பத்தித் துறையில் அடங்குவது யாது?
1. மீன்பிடி 2. சுரங்கமகழ்தல்
3. நீர் மின் வாயு வழங்கல் 4. களஞ்சிய சேவை

08. தொழில் தேடுவோரும், தொழில் கொள்வோரும் தொடர்பு கொள்ளும் சந்தை எவ்வாறு அழைக்கப்படும்.
1. மூலதனச் சந்தை 2. ஊழியச் சந்தை
3. பணச்சந்தை 4. பங்குச்சந்தை.

09. "சம்பளமட்டம்" எவ்வகையான புறச்சூழல் ஆகும்.
1. சமூக கலாசார சூழல்
2. விஞ்ஞான தொழில்நுட்பச் சூழல்
3. பொருளாதாரச் சூழல்
4. அரசியல் சட்ட சூழல்.

10. தகவல் எழுத்துருவில் வான் அலை மூலம் அனுப்பப்படும் முறை எவ்வாறு அழைக்கப்படும்.
1. பக்ஸ் 2. டெலக்ஸ்
3. கூரியர் சேவை 4. இன்ரர்கொம்

11. காப்புறுதி தொடர்வில் 3 ஆம் கட்சி எனப்படுவோர் யார்?
1. காப்புறுத்துவோர் 2. காப்புறுதி செய்வோர்
3. பாதசாரி 4. வணிகர்கள்.

12. நடைமுறைவைப்பு உட்பட்ட வைப்புக்களை ஏற்று, கடனை வழங்கும் வங்கி யாது?
1. சேமிப்புவங்கி 2. மத்திய வங்கி
3. வணிக வங்கி 4. ஆசிய அபிவிருத்தி வங்கி

13. மோசடி வர்த்தகருக்கு எதிராக, நுகர்வோர் கூட்டாக நடவடிக்கை எடுப்பதற்கான சங்கம் எது?
1. நுகர்வோர் சங்கம்
2. ஐக்கிய நாணய சங்கம்
3. பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்
4. உணவுண்போர் சங்கம்.

14. காசோலையின் முன்பக்கத்தில் பெயர் குறிக்கப்பட்டவர் அல்லது உரித்தானவர் - காசோலையின் பின் பக்கத்தில் தனது ஒப்பத்தைஎழுதும்முறை எவ்வாறு அழைக்கப்படும்.
1. குறுக்குக் கோடிடுதல் 2. சாட்டுதல்
3. புறக்குறிப்பிடுதல் 4. ஆலோசனை வழங்கல்

15. பணத்தாட்டு நிறுவனங்களில் ஒன்று
1. யோன்கீல்ஸ் 2. மகாராஜா லீசிங்கம்பனி
3. வரையறுத்த மேக்கன்ரைல் லீசிங்கம்பனி
4. தேசிய சேமிப்பு வங்கி

16. ஜாவா என்பது
1. ஓர் வன்தட்டு 2. ஓர் விசைப்பலகை
3. ஓர் சுட்டி 4. ஒரு கணினிமொழி

17. ஒரு முயற்சியாளனுக்கு இருக்கவேண்டிய பண்பு அல்லாதது எது?
1. தலைமைத்துவ ஆற்றலைக் கொண்டிருத்தல்.
2. நட்டப் பொறுப்புக்களைத் துணிவுடன் ஏற்றல்.
3. நிறுவனத்தில் ஏற்படும் பிணக்குகளில் தலையிடாது இருத்தல்.
4. வியாபாரச் சூழலை இனம் காணும் திறன்.

18. தன் கீழ் பணிபுரிபவருக்குச் சிறந்த வழிகாட்டலை ஏற்படுத்தி, நிறுவனத்தின் விருப்பம், நம்பிக்கை, பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தி, நிறுவன நோக்கத்தை அடையச் செய்தல்.
1. தலைமைத்துவம் 2. தொடர்பாடல்
3. ஊக்குவித்தல் 4. செயற்படுதல்

19. நிறுவனத்தின் பௌதீக வளங்களையும், மனித வளங்களையும் ஒன்றிணைக்கும் கருமம் எது?
1. திட்டமிடுதல் 2. ஒழுங்கமைத்தல்
3. கட்டுப்படுத்தல் 4. செயற்படுத்தல்

20. பணத்தினைப் பயன்தருவழிகளில் வைப்பிலிடுதல்.......... எனப்படும்.

21. உட்திரும்பல் நாளேட்டில் பதிவதற்கான மூல ஆவணம்.
1. வரவுத்தாள் 2. செலவுத்தாள்
3. பற்றுச்சீட்டு 4. கைச்சாத்து

22. முதன்மை ஏடாகவும், பேரேடாகவும் பயன்படுத்தப்படும் ஏடு எது?
1. காசேடு 2. கொள்வனவுநாளேடு
3. விற்பனைநாளேடு 4. பொதுத்தினசரி ஏடு.

23. தொடக்கப் பதிவுகள் முதலில் பதியப்படும் ஏடு எது?
1. பொதுத் தினசரி ஏடு 2. கொள்வனவுத் தினசரி
3. விற்பனை தினசரி 4. காசேடு

24. கொடுக்க கழிவு நிரல் காசேட்டின் எந்தப்பக்கத்தில் காட்டப்படும்
1. காசேட்டின் செலவுப் பக்கத்தில்.
2. காசேட்டின் வரவுப் பக்கத்தில்
3. காசேட்டில் வரவு - செலவு இரு பக்கத்திலும்
4. காசேட்டில் எப்பக்கத்திலும் காட்டுவதில்லை.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*எண்ணித் துணிக கருமம் - துணிந்தபின்*
*எண்ணுவதென்பதிழுக்கு.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### வீதிப் புனரமைப்பு எப்போது?

மழைகாலம் ஆரம்பமாகியுள்ள இந்தச் சூழலில், வீதி விபத்துக்களும் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. இராணுவ வாகன விபத்துக்களால் ஏற்படுகின்ற மரணங்கள், காயங்கள் ஒருபுறமிருக்க- ஏனைய வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களும் அதிகரித்துவருகின்றன.

சமீப நாட்களாக, வீதிவிபத்துக்கள் அதிகமாக இடம்பெறத் தொடங்கியுள்ள நிலையில், பொலிஸாரும் வீதிக் கண்காணிப்பை தீவிரமாக்கியுள்ளனர். வீதி ஒழுங்குமுறைகளைப் பேணுவதிலும், வாகனச் சாரதிகளிடம் அனுமதிப்பத்திரங்களைக் கோருவதிலும் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர்.

இவைமட்டுமே - வீதிவிபத்துக்களைக் குறைக்கவோ, தவிர்க்கவோ போதுமான நடவடிக்கைகளாக இருக்கப்போவதில்லை.

தேர்ச்சி பெற்ற சாரதிகள்கூட, எத்தனையோ விபத்துக்களில் சிக்கியிருக்கிறார்கள். இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

வீதிகளின் தரங்கூட, விபத்துகளுக்குக் காரணமாக உள்ளதென்ற உண்மை - அநேகருக்குப் புலப்படாமலேயே இருந்துவருகின்றது. குறிப்பாக, யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில், வீதிகளின் நிலையைச் சொல்லித்தெரியவேண்டியதில்லை.

குடாநாட்டில் உள்ள முதல்தர வீதிகளில் இருந்து, சாதாரண சிறிய வீதிகள் வரை, மிக மோசமான நிலையில்தான் இருந்து வருகின்றன.

பல வருடங்களிற்கு முன்னர் செப்பனிடப்பட்ட வீதிகள் - அதற்குப்பின்னர் ஏதோ பெயருக்கு, ஆங்காங்கே இருந்த சிறிய சிறிய கிடங்குகளை அடைத்ததைத் தவிர, முறையாகப் புனரமைக்கப் படவில்லை.

ஏ-9 வீதி புனரமைப்புப் பற்றி பெரிதாகப் பேசப்பட்டாலும், இன்னமும் முடிவில்லாத நிலையில் தான் உள்ளது. இந்த வீதிப் புனரமைப்பாவது, குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேறுமென்ற நம்பிக்கை இருந்தாலும், குடாநாட்டிலுள்ள வீதிகள் எப்போது புனரமைக்கப்படும் என்பதற்கு, எந்தவொரு உத்தரவாதமும் கூறமுடியாது.

பலவருடங்களுக்கு முன்னர் போடப்பட்ட வீதிகள்- இப்போது, குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. இந்த வீதிகள் தற்போதைய மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையிலேயே, விபத்துக்கள் ஏற்படுவது அதிகமாகி வருகின்றது.

குன்றும் குழியுமாகக் கிடக்கும் பிரதான வீதிகளின் நிலையே சீர்செய்யப்படாதுள்ளநிலையில், சிறிய வீதிகளைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா எனக் கேள்வியெழுப்புவதில் அர்த்தமில்லைத்தான்.

ஆனாலும், தொடர்ந்தும் இதே பாராமுகமான நிலை நீடித்தால்- அதனால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அசௌகரியங்களை சம்பந்தப்பட்ட தரப்பினர் - கண்டும்காணாமல் இருந்துவிடமுடியாது.

பல இடங்களில் வீதிகளைப் புனரமைப்பதற்கென, ஒப்பந்தகாரர்களுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், அந்த ஒப்பந்தகாரர்களின் அசிரத்தையால், வீதிகள் செப்பனிடும் பணிகள் மந்தகதியில் இடம்பெறுவதையும் காணமுடிகின்றது.

கற்கள் வீதியோரமாகக் குவிக்கப்பட்டு பல மாதங்களாகி விட்டாலும், பிரதான வீதிகள் சீர்செய்யப்படாமல் உள்ளன. இதனாலும், வீதி விபத்துக்கள் மிகவும் தாராளமாகவே இடம்பெற்றுவருகின்றன.

அரசாங்க அதிகாரிகள், மழைகாலத்துக்கு முன்னரே இந்த வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். ஆனால், வழமைபோலவே இந்த அதிகாரிகள்- அரசாங்கம் நிதி ஒதுக்கவில்லை என்று குற்றச்சாட்டுக்களை கூறி, தாம் தப்பித்துக்கொள்ள முற்படக்கூடும்.

இந்த நிலைதான் பல காலமாக நீடிக்கின்றது. இந்த நிலையை மாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இதன் விளைவுகள் என்ன என்பதை இந்த அதிகாரிகள் மக்களுக்கு சொல்ல வேண்டாமா?

பொதுமக்களைப் பாதிக்கின்ற இத்தகைய விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை அதிகாரிகள் இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும்.

# ஊடகங்களுக்கான சுதந்திரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது!

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம்

பாரிஸில் இயங்கிவருகின்ற எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் சங்கம் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் சுதந்திரம் தொடர்பான ஆய்வினை சர்வதேச ரீதியாக மேற்கொண்டுள்ளது.

ஆண்டு தோறும் இவ்வாறான ஆய்வு இடம்பெற்றுவருவதாகவும், இந்த ஆய்வுகளின் முடிவுகளின்படி ஊடகவியலாளருக்கு கொடுக்கப்படுகின்ற சுதந்திரங்களின் அளவு வீழ்ச்சி அடைந்து வருவதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வகையில் 2002 ஆம் ஆண்டு 51 சதவீதமாக இருந்த ஊடவியலாளருக்கு அளிக்கப்படும் சுதந்திரத்தின் வீதமானது, 2003 ஆம் ஆண்டு 81 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த அடிப்படையில் இந்தியாவில் 80 சதவீதத்தில் இருந்து 120 சதவீதமாகவும், பாகிஸ்தானில் 119 சதவீதத்தில் இருந்து 129 சதவீதமாகவும், அமெரிக்காவில் 135 சதவீதமாகவும், இஸ்ரேலில் 149 சத வீதமாகவும் ஊடகவியலாளருக்கு கொடுக்கப்படுகின்ற சுதந்திரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறு பாரிஸில் இயங்கிவருகின்ற எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்தது.

இதேவேளை, ஊடகவியலாளருக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படும் நாடுகளில் பின்லாந்து முதலிடத்தையும், அயர்லாந்து இரண்டாவது இடத்தையும், நெதர்லாந்து மூன்றாவது இடத்தையும், நோர்வே நான்காவது இடத்தையும் பெறுகின்றன. கடந்த ஆண்டு நோர்வே ஊடகவியலாளருக்கு அளிக்கும் முக்கியத்துவத்தில் மூன்றாம் இடத்தை வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## படையிலிருந்து தப்பியோடியோருக்கு கம்பஹாவில் விலகல் சான்றிதழ்!

படைகளில் இருந்து தப்பியோடியோரை நிரந்தரமாகச் சேவையில் இருந்து நீக்கும் திட்டம் கம்பஹா மாவட்டத்தில் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

கம்பஹா மாவட்டத்தில் மட்டும் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் தப்பி ஓடியுள்ளனர். இவர்களைச் சேவையில் இருந்து நீக்கி, விலகல் சான்றிதழ் வழங்கும் திட்டமே நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கமைய கம்பஹா மாவட்டச் செயலகத்தில் நியமிக்கப்பட்ட விசேட கருமபீடத்தில் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றோர் தமது ஆவணங்களைச் சமர்ப்பித்து விலகல் சான்றிதழுக்கு விண்ணப்பித்து வருகின்றனர்.

## பொலிஸ்மா அதிபர் நியமனம் அடுத்த வாரம் இடம்பெறும்!

புதிய பொலிஸ்மா அதிபருக்கான நியமனம் அடுத்தவாரம் இடம்பெறும் என, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஓய்வு பெற்றதை அடுத்து, ஜனாதிபதியால் - இந்திரா டி சில்வா புதிய பொலிஸ்மா அதிபராகப் பரிந்துரைக்கப்பட்டார்.

எனினும், இதனை அரசியலமைப்பு நிர்ணயசபை ஏற்றுக்கொள்ளவில்லை. இவருடன் இணைந்த தரம்கொண்ட மேலும் மூன்று சிரேஷ்ட உதவிப் பொலிஸ்மா அதிபர்கள் சேவையில் இருப்பதால், அவர்களுடைய அனுபவம் குறித்த தகவல்கள் திரட்டப்படவேண்டும் என அரசியலமைப்பு தெரிவித்திருந்தது.

இந்தநிலையில் இந்தத் திட்டத்தின் பணிகள் நடைபெற்று வருவதாகச் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# மைத்திரிபால சிறிசேன அனுப்பிய கடிதத்தில் பொது இணக்கப்பாடு பற்றி குறிப்பிடவில்லை

## ஜே.வி.பி வட்டாரங்கள் தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனா - ஜே.வி.பிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில், பொது இணக்கப்பாடு தொடர்பான எந்தவிதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை என்று ஜே.வி.பி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அக்கடிதத்தில், அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ள இருக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருமாறே, கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொது இணக்கப்பாடு தொடர்பான, எந்தவிதமான கருத்தும் தெரிவிக்காததால், அதில் என்ன பிரயோசனம் என்று குறிப்பிட்டு ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளதாக ஜே.வி.பி.யின் வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்குபற்றுவதா இல்லையா என்பது பற்றி ஜே.வி.பி தீர்மானிக்கவில்லை என்றும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## சிப்பாயின் வீட்டிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு!

அனுராதபுரம், நுவரெலியா பிரதேசத்தில் உள்ள இராணுவச் சிப்பாயின் வீடொன்றிலிருந்து, பல வெடிப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

மூன்று கைக்குண்டுகள், 75 பல வகைப்பட்ட ரவைகள், சீனத்தயாரிப்புத் துப்பாக்கியும் பல பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் அடிப்படையில் இவ்வீடு சோதனையிடப்பட்டதெனவும், ஆயுதங்களோடு சயனைட் வில்லைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிபதி இவருக்கு பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்ததோடு, சந்தேகநபரை இம்மாதம் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## கந்தரோடைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி முறியடிப்பு

கடந்த ஒரு வாரகாலமாக கந்தரோடைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நடைபெறறு வந்ததை அவதானித்த பொதுமக்கள், அதை முறியடித்துள்ளனர். இதுபற்றி தெரியவருவதாவது கந்தரோடை மேற்கில் உள்ள, சங்கம்புலவு இந்து மயானத்திற்கு அண்மையிலுள்ள பற்றைக்காணி ஒன்றில் இரவு வேளைகளில் கசிப்பு உற்பத்தி நடைபெற்றுவந்தது. ஆரம்பத்தில இதையாரும் அறிந்திருக்கவில்லை. அப்பிரதேசத்தில் புதிய நபர்களின் நடமாட்டத்தை அவதானித்த விவசாயிகளும், பொதுமக்களும் ஞானவைரவ சனசமூக நிலையத்திற்கு உடனடியாக இத்தகவலை எடுத்துக்கூறினர். விழிப்படைந்த நிர்வாகத்தினரும், அங்குள்ள இளைஞர்களுமாக ஒன்று சேர்ந்து சுமார் 50 பேர் உட்பட அப்பிரதேசத்தின் பகுதிகளை நோட்டமிட்டனர்.

இதன்பொழுது அங்கு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதற்கான தடயங்களும், உபகரணங்களும் காணப்பட்டன. அத்தோடு அங்கு பாவித்த கிணறு 20 வருடங்களுக்கு மேல் பாவனையற்று இருப்பதாகவும், தெரியவருகிறது. பொதுமக்கள் விழிப்படைந்ததை அறிந்த கசிப்பு உற்பத்தியாளர்கள் அன்றிரவே அகப்பட்ட பொருட்களுடன் தலைமறைவாகியுள்ளனர்.

சங்கம்புலவு மயானத்தை சுற்றியுள்ள பற்றைகள், வயல் வெளிகள் போன்ற இடங்கள் மாலை நேரங்களிலும், சனி, ஞாயிறு தினங்களிலும் காதல் ஜோடிகளின் உல்லாசகளமாகவும் பயன்படுகின்றது. மேற்கூறப்பட்ட பல சம்பவங்கள் இப்பகுதியில் அதிகரித்துள்ளதால் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (42)

## இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட வைத்தியசாலை ஊழியர்களின் 16வது ஆண்டு நினைவு நாள்

### நேற்று அனுஷ்டிப்பு

கடமையில் இருந்த 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வைத்தியசாலை ஊழியர்களின் 16 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

வைத்தியசாலை உத்தியோகத்தர் ப.மகேந்திரதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இறந்த ஊழியர்களின் உறவினர்களால் ஈகச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம் கொல்லப்பட்டவர்களின் உருவப்படத்திற்கு, மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் வைத்தியசாலை ஊழியர்கள் வைத்தியர்கள் எனப்பலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

நினைவுரைகளை வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் இ.பத்மநாதன், தலைமை மேற்பார்வையாளர் ஜே. கைலாசபிள்ளை, தாதிய உத்தியோகத்தர் க.அருட்செல்வி, பரிசோதகர் வ.கந்தசாமி ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் நாள் இந்திய இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் வைத்திய கலாநிதி ஒருவர் உட்பட 21 ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்து கொள்ளையர்கள் பொலிஸாரல் கைது

இதுவரை சுமார் 146 கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக கூறப்படும் ஐந்து பேர், நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும், இருந்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இக் கொள்ளையர்கள் 1992 ஆம் ஆண்டு முதல் சுமார் 60 கோடி ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்களை இவர்கள் கொள்ளையிட்டிருப்பதாக பேலியகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர். (01)

# தறிகெட்ட போக்குவரத்தை நெறிப்படுத்துவது யார்?



செய்திக் கட்டுரை

காலை விடிந்தால் நாம் அனைவரும் ஏதாவது ஒரு தேவை கருதி, பொது வீதியைப் பயன்படுத்திப் போக்குவரத்து செய்யவேண்டிய தேவை சிறுவர் முதல் முதியோர்வரை அனைவருக்கும் அத்தியாவசியமாக உள்ளது.

வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டால் மீண்டும் உயிருடனோ அல்லது ஊனமின்றியோ வீடு செல்வோமா என்று தற்போதைய சூழ்நிலையில் கூறமுடியாதுள்ளது. பாரிய யுத்தம் நடைபெற்ற காலங்களில்கூட, ஓரளவேனும் விதிமுறைகளை அனுசரித்த மக்கள், இன்று முற்றுமுழுதாகத் தான்தோன்றித்தனமாக, கட்டுப்பாடு இன்றி, எவரும் எப்படியும் நடக்கலாம் என்ற மனப்பாங்கில் தெருக்களில் பயணிப்பதை அனைவரும் காணமுடிகின்றது.

நாளுக்கு நாள் புதுப்புது அமைப்புக்களில் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், கார், வான், லொறி பாரிய நீளம்கூடிய வாகனங்களின் வருகையினால் (இறக்குமதியினால்), மக்களின் அவலங்களும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

வாகனம் செலுத்துவது என்பது இன்றைய நாட்களில் அனைவராலும் முடிந்த செயலாகும். அத்துடன், வாகனம் ஓடுவதைப் பலர் நாகரீகமாகவும் நினைக்கின்றனர். இவர்கள் குறுக்கும் மறுக்குமாக ஓடுவதையே நாகரீகமாக நோக்குகின்றனர். போக்குவரத்து விதிமுறை என ஒன்று உள்ளது என்பது இவர்களுக்குத் தெரியாது. வாகனத்தில் ஒய்யாரமாக ஏறி அமர்ந்து, மற்றவர்கள் பார்த்து ரசிக்க வித்தைகள் பல புரிந்து ஓடுவதை 'ஸ்ரைல்' என நினைக்கிறார்கள். இவர்களின் இச்செயல்களால் எத்தனை அப்பாவி மக்கள் உயிரிழக்க அல்லது ஊனமடைய நேரிடுகிறது. இவற்றை அவர்கள் சற்றும் எண்ணிப்பார்ப்பதில்லை.

பாலர் வகுப்பு பயிலும் பிள்ளை முன்பள்ளிக்குச் செல்வதும் சைக்கிளில், இளைஞர் - பக்கம் பக்கமாகக் கைகோர்த்துச் செல்வதும் சைக்கிளில்தான். இதைவிட ஆண் - பெண் வேறுபாடு இன்றி, கட்டுப்பாடு இன்றி மோட்டார் சைக்கிளிலும் பக்கம் பக்கமாக (சமாந்தரமாக) கதைத்துக் கொண்டே வேலைக்கு போகிறார்கள். 'ஹூரோ ஹொண்டாவில் இளைஞர்கள் - இயமன் உலகம் செல்வது போன்ற வேகத்தில் ஓடுகிறார்கள். பாடசாலை மாணவர்களும், மாணவிகளும் பண்பாடுகள் இன்றி, தாம் படிக்கப் போவதையும் மறந்து, மணவறையில் தம்பதிகள்போல கை கோர்த்தபடியும், தோளில் கை வைத்தபடியும் அங்குமிங்குமாக, ஆடி ஆடி செல்வதை எப்பொழுதும் எல்லோரும் காணமுடிகிறது.

இவர்களது இச்செயல்களால் பாதிப்படைவது யார், எமது குடா நாட்டு தமிழ் மக்களே. இவர்கள் எதை செய்தாலும் எவரும் கேட்க முடியாது. கேட்டால் நடப்பது..... வீதிகளில் விபத்துக்கள் ஏற்படுவது இவற்றால் என்பதைப் பொலிஸார் அறிவதில்லைப்போலும். இவற்றால் எத்தனை உயிர்கள் ஊனம் அடைகின்றனர், உயிரிழக்கின்றனர். ஆனால், பொலிஸார் இவற்றை எல்லாம் பார்வையாளராகச் சந்திக்குச் சந்தி நின்று ரசிக்கின்றனர். மோட்டார் சைக்களில் தலைக்கவசம் அணியாமல் (ஹெல்மெற்) செல்பவர்களை மட்டும் தேடிக்கண்டுபிடித்து 'கறப்பதில்' கண்ணும் கருத்துமாக உள்ளனர். தலைக்கவசமின்றிச் சென்று, விபத்தில் பாதிக்கப்படுவது அந்த மோட்டார் சைக்கிள் ஓட்டியே. ஆனால், மற்றவர்களின் பிழையான செயல்களால், சரியான வழிமுறையில் செல்பவர்களும் பாதிப்படைவதை ஏற்றுக் கொள்ளலாமா?

பாடசாலை மாணவர்கள் மட்டுமலலாது, மாணவிகள்கூட பாடசாலை சீருடையுடன் 5, 6 பேர் சமாந்தரமாகக் கை கோர்த்தபடி செல்கின்றனர். பின்னால் செல்பவர்கள் எவ்வளவு சத்தத்தில் ஹோர்ண் அடித்தாலும், அது எருமை மாட்டில் மழைபெய்வதுபோலவே அவர்களுக்கு உள்ளது. இப்படிச் செல்வோர் மீது தவறுதலாக வாகனம் ஏதும் மோதிவிட்டால், தெருவில் நிற்பவர்களும் சேர்ந்து விசாரணை ஏதுமின்றி மோதிய வாகன ஓட்டிமீது பிழை எனச் சொல்லி, தீர்த்து விடுவார்கள். சில சமயங்களில் வாகனமும் தீக்கிரையாக்கப்பட்டுவிடும் அல்லது அடித்து நொருக்கப்படும்.

லைசென்ஸ் பெற்றுவிட்டால் போதும். பின்னர் எப்படியும் ஓடலாம் என்பதே பலரின் நினைப்பு. ஏதோ ஒருவாறு எழுத்துப்பரீட்சையில் தப்பிவிட்டோம். இனி எட்டு (8) அடித்துக் காட்டினால்போதும். இதுவே போக்குவரத்து விதிமுறை என நினைக்கின்றனர் பலர். எந்த இடத்தில் சிக்னல் போடவேண்டும், திரும்பப் போகும் தூரத்திலிருந்து எவ்வளவு தூரத்திற்குமுன் சிக்னல் போடவேண்டும், வாகனத்தை ஓடத் தொடங்கு முன் - பின்னால் ஏதாவது வாகனம் வருகிறதா எனப் பார்க்கவேண்டும், பிறேக்கிடிக்கும்போதும், முன்செலலும் வாகனத்தை முந்தும்போதும், பின்னால் வரும் வாகனத்தை முந்த வழிவிடும்போதும், சிறிய ஒழுங்கையால் வந்து பிரதான வீதியில் நுழையும்போதும், இரவில் முன்னால் வரும் வாகனத்தின் சாரதிக்குக் கண் குத்தாமலிருக்க - ஹெட்லைட்டை டிம் பண்ணவேண்டும் போன்ற முக்கிய விதிமுறைகள்கூட பலரால் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இவற்றால் பலவிபத்துக்களைத் தவிர்க்கமுடியும். தற்போது இறக்குமதி செய்யப்படுகின்ற TVS, பஜாஜ், ஹீரோ ஹொண்டா ஆகியவற்றின் ஹெட்லைட் மிகவும் பவர் கூடியவை. இரவில் அவற்றை விலத்தியவுடன் முன்னால் செல்கின்ற, வருகின்ற வாகனங்களையும், தெருவிலுள்ள குழிகளையும் காணமுடியாது கண் இருட்டிவிடும். அப்படிப்பட்டவேளைகளில், விபத்துக்கள் ஏற்படுவது சர்வசாதாரணம். தற்காலத்தில் வாகன அனுமதிப் பத்திரம் பெற்ற பலருக்கு இப்படிப்பட்ட பல அத்தியாவசியமான நடைமுறை செயற்பாடுகள் கூட, தெரிவதில்லை. இவற்றை நெறிப்படுத்த பயிற்சி வகுப்புக்களை நடாத்திக்காட்ட, போக்குவரத்துப் பொலிஸார் முன்வரவேண்டும். அத்துடன், பக்கம் பக்கமாக கதைத்து, கை கோர்த்தபடி செல்வோர் மீதும் - தண்டம் விதிக்கும் வேலையை ஆரம்பித்தால், வீணான விபத்துகளைக் கணிசமான அளவு குறைக்க முடியும்.

**சி.சந்தானகுமாரன்**

# தமிழினத்தின் பரம்பரைச் சொத்தான கூத்து இலக்கியம்

**திருமறைக் கலாமன்றம் அண்மையில் ஈழத்துக் கூத்து இலக்கிய விழாவொன்றை நடத்தியிருந்தது. அந்த நிகழ்வின்போது ஈழத்தின் பல பாகங்களிலும் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த கூத்துக் கலைஞர்கள் உரையாற்றியிருந்தார்கள். அவர்களின் உரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட முக்கிய விடயங்கள் இங்கு தொடர்ந்து பிரசுரமாகவுள்ளன.**

## மலையகம்

எங்களுடைய எல்லாக் கலைகளும் மானிட விடுதலையைப் பாடட்டும். மக்களின் உணர்வுகளோடு கலந்துவிட்ட கலைகள் இல்லாமல் ஒரு மனித சமுதாயத்தை நாம் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. அவ்வளவிற்குக் கலைகள் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துவிட்டன.

இன்று மலையக மக்கள், தெரிந்தோ தெரியாமலோ, அவர்களுடைய கலைகளிலிருந்து அவர்களை அந்நியப்படுத்தும் சக்திகள் எனப் பல எதிர்ப்புக்களிற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்த வேளையிலே, அவர்களது பண்பாடு, விழுமியங்கள் மூலமாக, அவர்களது சமுதாய வளர்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

மலையகத்தைப் பொறுத்த வகையிலே, அங்குள்ள கலைவடிவங்கள் மக்களின் வாழ்வோடு இறுகப் பிணைந்துள்ளன. இதனால், அநேகமான வைபவங்களிலும், விழாக்களிலும் கலை ஆற்றுகைகள் நடைபெற்றவண்ணமேயுள்ளன. மனித வாழ்க்கையினுடைய மாற்றங்களுக்கு - மகத்தான வழியிலே பங்காற்றிய கலைகள், மலையக மக்களுடைய சமூக விடுதலைக்கு எவ்வாறு பங்காற்ற வேண்டுமென்பதைத் தற்போது நாம் ஆராயவேண்டியுள்ளது.

இந்தியாவின் தமிழ்நாட்டிலே பிறந்து வளர்ந்து பின், இலங்கையின் மத்திய மலை நாட்டிலே இற்றைக்கு 180 வருடங்களுக்கு மேலாக வழங்கிவருகின்ற கலைகளான காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், லவகுசா, குறவஞ்சி, காத்தவராயன் கதை, தேசிங்குராயன் கதை, நல்லதங்காள் கதை என்பவற்றோடு கோலாட்டம், கரகாட்டம், சிலம்பு போன்ற கிராமிய கலைகளும் மலையக மக்கள் மத்தியிலே பிரபல்யம் பெற்று விள்ங்குகின்றன.

குறிப்பாக 'அர்ச்சுனன் தபசு' இலக்கியத்திலே வகிக்கின்ற இடம் பற்றி ஆராய்ந்தால், இதிகாசங்களிலே ஒன்றான மகாபாரத்திலே பஞ்ச பாண்டவர்களுள் ஒருவனாகச் சித்தரிக்கப்படுகின்ற அருச்சுனன் - கௌரவர்களுடைய சூழ்ச்சியின் காரணமாகக் காடேகிய பாண்டவர்களிடம்- வியாச முனிவர் 'அருச்சுனன் சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து, பாசுபத அஸ்த்திரத்தை பெற்றால் ஒழிய, பாரதப் போரிலே வெற்றி பெறுவது கடினம்' எனக் கூறுகின்றார். இதற்காக அருச்சுனன் தவம்புரிய செல்கிறான். ஒற்றைக்காலிலே நின்று கடுந்தவம் புரிந்து, இந்தப் பாசுபத அஸ்த்திரத்தைப் பெறுகிறான். இந்தக் கதையை மையமாக வைத்தே 'அருச்சுனன் தபசு' கூத்து ஆடப்படுகிறது.

இது இந்தியாவிலே ஆடப்படுகின்ற தெருக்கூத்துக் கலைகளில் இருந்தே பரிணமித்தது. சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலே இருந்து கூலித்தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்டவர்களே மலையக மக்கள். இந்தியாவில் இருந்து இவர்கள் இலங்கை வரும்போது, வெறும் கூலிகளாக மட்டும் அல்லாது, தங்கள் உணர்வுகளோடு இரண்டறக் கலந்த கலைகளைக் காவீ வந்த கலைஞர்களாகவுமே இருக்கிறார்கள்.

மலையகக் கூத்து வடிவங்கள் பொதுவாக ஒரு இரவுக்குரியவையாகவே அமைக்கப்படுகின்றன இவற்றினுடைய பாடல்களும், ஆடல்களும் மலையக கூத்து கலைஞர்களாலே உருவாக்கப்பட்டவை. அநேகமான கூத்துக்கள் - இலக்கிய கதைகளாக இருந்தபோதிலும், அவற்றின் மூலப்பாடல்களை விடுத்து, புதிய பாடல்களாக உருவாக்கப்பட்டு குறிப்பாக மலையக சமூகத்தினருடைய சொல்லாட்சிகளை அதனுள்ளே புகுத்தியே இக்கலைப் படைப்புக்கள் படைக்கப்பட்டு வருகின்றன.

கூத்து ஆடப்படுகின்ற காலம், சமூகத்தளம் என்பவற்றைப் பொறுத்துப் பாடல்களின் மெட்டுகளும், ஆடல் வகைகளும் மாற்றப்படுகின்றன. பொதுவாக எல்லாக் கூத்துக்களிற்கும் அடிப்படை ஒன்றாகவே இருந்தாலும், பிரதேசங்களுக்கு ஏற்ற வகையிலே அவைமாற்றி அமைக்கப்படும்போதுதான், முழுமை பெற முடியும்

ஈழத்து கூத்துக்களுடைய அடிப்படை அம்சங்கள் பல- மலையக கூத்து முறைமைகளிலே காணப்படுகிறது. இதனை எவரும் மறுக்க முடியாது. ஆற்றுகை முறைகள் காலத்திற்குக் காலம் மலையக மக்கள் பெற்ற அனுபவம் மூலமாக மாற்றி அமைக்கப்பட்டது. அதிகார வர்க்கத்திற்குச் சவால் விடுவதற்காக சில கிராமிய தெய்வங்களினுடைய கதைகள் - கூத்துக்களில் இடைச் செருகல்கள் செய்யப்பட்டன.

வருடத்தினுடைய அநேக நாட்களில் கடுமையான உழைப்பாளிகளாக இருக்கும் மலையக மக்களின் உணர்வுகள், எதிர்பார்ப்புக்கள் பல இந்தக் கூத்துக்களிலே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்குள்ளும், அடக்குமுறைகளுக்குள்ளும் அடங்கிப் போயுள்ள மலையக மக்கள் - தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகமாக இந்தக் கூத்துக் கலையைப் பாவிக்கின்ற தன்மையை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இதனை அந்த வாழ்வுத் தளத்திலே நின்று பார்க்கின்றபோதுதான், நன்றாக விளங்கிக்கொள்ள முடியும். மலையக மக்கள் தமது மரபுக்கூத்தாக, அருச்சுனன் தபசு என்பதையே பேணிவருகின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் உண்டு. அருச்சுனன்- சிவபெருமானிடம் இருந்து பாசுத அஸ்திரத்தைப் பெறுவதற்காகத் தவம்புரிகின்றபோது, பல தடைகளை எதிர்நோக்குகிறான். ஆனால், அனைத்துத் தடைக் கற்களையும் தாண்டியே தனது இலட்சியத்திலே வெற்றி பெறுகின்றான். அதேபோல, மலையக மக்களும் தமது தேவைகளை நிறைவு செய்வதற்குப் பல தடைகளைத் தாண்டவேண்டியுள்ளது. அவர்களது விடாமுயற்சியும், கடின உழைப்பும்தான் இலக்கை நோக்கி பயணிக்க ஏதுவாக அமைகின்றன. இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள கதைக்கும், நிகழ்காலத்தில் இடம்பெறுகின்ற கதைக்கும் இடையேயான ஒற்றுமைத் தன்மைத்தான் கூத்து இலக்கியத்துறைக்கு மலையக மக்களைப் பங்காற்றச் செய்தது என்றால் அது மிகையில்லை.

கூத்துக்களிலே தெய்வாம்சத் தன்மைகள் நிறைந்து காணப்படுவதனால், அவற்றை உரியமுறையிலே மலையக மக்கள் காத்து வருகிறார்கள். அதற்காகச் சிறந்ததொரு ஒழுக்கக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கவும் அவர்கள் முனைகிறார்கள்.

கூத்துக்களைத் தயாரிப்போரை ஈழத்தினுடைய பல பாகங்களில் 'அண்ணாவிமார்' என அழைப்பார்கள். ஆனால், மலையகத்திலே அவர்களைக் கூத்து வாத்தியார்கள் எனறே அழைப்பது வழமை. இந்த கூத்து வாத்தியார் - கூத்தை எப்போது மேடையேற்றுவது எனும் தீர்மானத்தை எடுப்பார். அதன் பின்னர், கூத்து ஆடும் கலைஞர்களிற்கு அறிவிக்கப்படும். அனைவரும் ஒரு மாலைப் பொழுதிலே கோயிலிலோ அல்லது வாத்தியார் வீட்டிலோ ஒன்று கூடுவார்கள்.




இந்த ஒன்றுகூடலின்போது, ஏற்கனவே கூத்து ஆடிய மூத்த கலைஞர்களிடம் இருந்து அவர்களுடைய பாத்திரத்தைப் புதிதாக ஒருவர் ஆடுவதற்கான உத்தரவாதம் பெறப்படும். பின் இது தோட்டத் தலைவர்கள், கோயில் தர்மகர்த்தாக்கள் ஆகியோருக்கு அறிவிக்கப்படும். அவர்கள் கூத்து எந்த நாளிலே அதாவது தீபாவளி, பொங்கல், வருடப் பிறப்புப் போன்ற பண்டிகைகளிலா அல்லது கோயில் திருவிழாக்களிலா நடைபெறவேண்டும் எனும் நேர அடடவணையைக் கூத்து வாத்தியாருக்கு வழங்குவார்கள்.

அதன் பின் வாத்தியார் மீண்டும் அனைவரிற்கும் அதனை அறிவிப்பார். பின் ஒத்திகைகள் ஆரம்பமாகும். கூத்துக்கள் பொதுவாகத் தெய்வ நம்பிக்கையோடு செய்யப்படுவதால், பாத்திரங்கள் மிகவும் புனிதமானவையாகக் கருத்தப்பட்டன. இதனால், கூத்திலே வரும் பெண் பாத்திரங்கள்கூட பருவம் அடையாத பெண்பிள்ளைகளிற்கே வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இது ஒரு வகையிலே பார்த்தால் பெண்களிற்கு எதிரான ஒடுக்குமுறையாகவே படுகிறது.

ஆனால், தற்போது ஆடப்படும் கூத்துக்களிலே பெண்களிற்கும் பங்கு வழங்கப்பட்டு, அந்த ஒடுக்குமுறையிவிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இது காலத்தின் தேவையே அன்றி கூத்தினுடைய அடிப்படையை மாற்றுவதாக ஒருபோதும் அமையாது என்பதே உண்மையாகும்.

கூத்துக்கள் சுமார் இரண்டு மாத காலங்கள் ஒத்திகை பார்க்கப்படும். பின்னர் ஒரு விசேட தினத்தில் அரங்கேற்றப்படும். கூத்து ஒத்திகை ஆரம்பமான நாளில் இருந்து அரங்கேற்றம் வரையான காலப்பகுதி ஒரு புனிதமான காலமாகவே கருதப்படும். அந்தக் காலப்பகுதிக்குள் வரும் விசேடநாட்களிலே கூத்து ஆட இருக்கும் கலைஞர்கள் விரதம் இருக்கவேண்டும். இவ்வாறு பல் வேறுபட்ட வழிமுறைகளின் ஊடாகவும் கூத்துக்கள் தெய்வ நம்பிக்கையையே வளர்ந்து நின்றன.

இத்தகைய கட்டுப்பாடுகளிற்குள் வாழும் கூத்துக் கலைஞர்கள், கூதது ஆற்றுகைக்கான நாள் நெருங்கும் தறுவாயிலே, கடினமான பயிற்சிகளை வாத்தியாரின் உதவியோடு மேற்கொள்வார்கள். இதன்போது, மற்ற பாத்திரங்களுடைய பாடல்களும், ஆடல் வகைகளும்கூட ஒவ்வொருவருக்கும் நினைவில் பதிந்துவிடும்.

இதனால், பின்னணி பாடுபவர்கள் வரிசையிலே வாத்தியாரோடு கூத்திலே பங்கு பற்றும் கலைஞர்களும் இணைந்து இருப்பார்கள்.

தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்திலே ஒரு கூத்து கலைஞர் அரங்கேறமுடியாத சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில், ஏனைய கூத்துக்கலைஞர்களிடம் இருந்து, பொருத்தமான ஒருவர் அந்த இடைவெளியை நிரப்புவதற்காகத் தெரிந்தெடுக்கப்படுவார். இதனாலும்கூட எல்லா பாடல்களையும் எல்லோரும் அறிந்திருக்க வேண்டும் எனக் கூத்து கலைஞர்களிற்கு வாத்தியாரால் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கும்.

(தொடரும்)

தொகுப்பு: இ.சர்வேஸ்

## ஈரான் அணுசக்தித் திட்டத்தில் புதிய திருப்பம்:

# யுரேனியத்தின் செறிவைக் குறைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவிப்பு!



ஈரானின் சர்ச்சைக்குரிய, அணு உலைத் திட்டத்தில் புதிய திருப்பம் தோன்றியுள்ளது.

அணுவாயுத உற்பத்திக்கு, அடிப்படை மூலப்பொருளான யுரேனியத்தின் செறிவைக் குறைத்துக் கொள்ளவும், அது தொடர்பான ஆவணங்களில் கையெழுத்திடுவதற்கும் ஈரான் முன்வந்துள்ளது.

ஈரானில் நடைபெற்ற வெளிநாட்டு அமைச்சர்களுக்கான கூட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மேலும், இந்தத் தகவல்களை சர்வதேச அணுசக்தி அமைப்பு கண்காணிப்பற்கு, ஈரான் அனுமதி அளித்தால், அணுசக்தியை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு அனுமதிப்பதென, ஐரோப்பிய வெளிநாட்டமைச்சர்கள் அந்தக் கூட்டத்தில் முடிவு கண்டிருந்தனர்.

இதனிடையே - லீயன்னாரில் அமைந்துள்ள சர்வதேச அணுசக்தி அமைப்பின் பிரிவு, அணுவாயுதங்களை பயன்படுத்தப்போவதில்லை என்ற உறுதிப்பாட்டை ஒக்ரோபர் 31 ஆம திகதிக்கிடையே ஈரான் வழங்க வேண்டுமென, காலக்கெடு விதித்திருந்தது.

மேலும், இந்த ஆண்டு ஆரம்பத்தில் - ஈரான் நடத்திய அணுசக்தி பரிசோதனையின்போது, அதிசெறிவுள்ள யுரேனியம் காணப்பட்டமைக்கு, விளக்கம் கோரியிருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்களில் அந்தப் படிவு இருந்ததாக ஈரான் பதிலளித்திருந்தது.



பயங்கரவாதத்திற்கு எதிரான தாக்குதல்களை நடத்த, நாய்களை எவ்வாறு ஹெலிகளில் இருந்து இறக்குவது என்ற பயிற்சியில் இந்தோனேஷிய போர் வீரர்கள்.



நச்சுவாயுத் தாக்குதல்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றிய பயிற்சியில், விமானநிலையம் ஒன்றில் தென்கொரிய போர்வீரர்கள் ஈடுபட்டிருப்பதையும், பயணி ஒருவர் இவர்களைக் கடந்துசெல்வதையும் படத்தில் காணலாம்.

## தகவல் படப்பிடிப்புக்கு நேபாளம் சென்றிருந்த

# பிரிட்டிஷ் படை அதிகாரிகள் குழுவினர் மாவோ போராளிகளால் தடுத்துவைப்பு!

நேபாளத்தின் தலைநகர் காட்மண்டுவின் மேற்குப் பகுதியான பாகலுங் என்ற பின்தங்கிய பகுதிக்கு தகவல் படப்பிடிப்பொன்றுக்குச் சென்றிருந்த பிரிட்டிஷ் படை அதிகாரி ஒருவரும், நேபாளத்தைச் சேர்ந்த இருவரும் மாவோ தீவிரவாதிகளால் ஞாயிற்றுகிழமை இரவு முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்றபோது, பி.பி.ஸி.யின் குழுவொன்றும் அந்த இடத்தில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படப்பிடிப்பை நிறுத்திவிட்டு தம்முடன் வந்து தமது தலைவரை சந்திக்குமாறு கோரி போராளிகள் அவர்களை அழைத்துச் சென்றதாகவும், இவர்கள் அனைவரும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்படவுள்ளதாகவும் அறியவருகிறது.

இதனிடையே - பிரிட்டிஷ் அரசு இராணுவ உதவிகளையும், பயிற்சியையும், நேபாள படைகளுக்கு வழங்கிவருகிறது.

கூர்க்கா படையணி எனப்படும் படைப்பிரிவொன்று, கடந்த 200 ஆண்டுகளாக பிரிட்டனில் இயங்கி வருகிறது.

இந்தப் படைப்பிரிவுக்கு, நேபாளத்தில் இருந்து ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை மாவோ தீவிரவாதிகள் எதிர்த்துவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கேபிள் கார்கள் மோதி நான்கு பேர் உயிரிழப்பு!

இந்தியாவின் இமாலயப் பிரதேசத்தில் கம்பி வழியாக ஆகாயத்தில் பிரயாணத்தை மேற்கொண்டிருந்த மூன்று கேபிள் கார்கள் - நிலத்தில் இருந்து 150 அடி உயரத்தில் மோதிக்கொண்டதில், நால்வர் உயிரிழந்ததாகவும், 11 பேர் வரை காயமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கிய 50 பேர் பொலிஸாரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் ஒரு குழந்தையும் மூன்று பெண்களும் அடங்குவர்.

### பாங்கொக்கில் பயங்கரவாத எதிர்ப்பு உச்சிமாநாடு

ஒபெக் அமைப்பின் ஆசிய பசுபிக் தலைவர்கள் - பாங்கொக்கில் அண்மையில் நடைபெற்ற உச்சி மாநாட்டில்- பயங்கரவாதம், பாரிய அழிவைத்தரும் ஆயுதங்கள் ஆகிய வற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

இம்மாநாட்டுக்கு தாய்லாந்து பிரதமர் தக்ஷின் சினவத்ரா தலைமை தாங்கியிருந்தார்.

## உலக நோக்கு

# பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களை சர்வதேசம் எதிர்க்க வேண்டும் என்கிறார் அரபாத்!



(காஸா)

காஸாப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 10 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக உலகநாடுகளை நடவடிக்கை எடுக்குமாறு, உலகத் தலைவர்களை பலஸ்தீன அதிபர் யசிர் அரபாத் வலியுறுத்தியிருந்தார்.

பஸ்தீனத்தின் உயர்மட்டக் குழுவின் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கும்போது -

குவாட் ரெற் அமைப்பு என வர்ணிக்கப்படும் அமெரிக்கா, ஐ.நா. சபை, ஐரோப்பிய யூனியன், ரஷ்யா ஆகிய நாடுகள் இந்த விடயத்தில் தலையிடவேண்டும் எனக் கேட்டிருந்தார்.

இஸ்ரேலின் இவ்வாறான தாக்குதல்கள், சமாதான முயற்சிகளின் வெற்றிக்குப் பெருந் தடையாக அமையுமென பலஸ்தீனப் பிரதமர் அஹமட் குஏரி குறிப்பிட்டுள்ளார்.

# ஜோர்தான் பிரதமர் பதவி விலகினார்!

ஜோர்தானிய பிரதமர் அலி அப்துல் ராக்கெட் தனது பதவியை திங்கட்கிழமை இராஜினாமாச் செய்துள்ளதாக, தலைநகர் அம்மானிலிருந்து அறிவிக்கப்பட்டிருந்தது.

இவரது ஆட்சியில் ஊழல் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதன் எதிரொலியாகவே, அவர் தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்திருந்தார்.

2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அலி அப்துல் ராக்கெட், அந்நிய முதலீடுகளை அதிகரிப்பதும், பொருளாதாரத்தை வளர்ப்பதையுமே தனது முக்கிய பணியாகக் கொண்டிருந்தார்.

இவர் பதவியேற்ற காலத்தில் இருந்து 6 முறை அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கப் படையினரால் தாம் உடற்சோதனைக்கு உட்படுத்தப் படக்கூடாது எனக்கோரி, ஈராக்கின் எரிபொருள் அமைச்சின் கட்டடத்துக்கு முன்னால் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் அரச ஊழியர்கள்.

# முக்கிய தலைவர்களைக் கொல்ல முயன்ற சந்தேகநபர்கள் பதினொரு பேர் கைதாகினர்!

## ஐவரிக்கோஸ்ட் அரசாங்கம் நடவடிக்கை



அரசியல்வாதிகள், நிர்வாக அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோரைக் கொல்வதற்குத் திட்டமிட்டதாகக் கருதப்பட்ட 11 சந்தேகநபர்களை ஐவரிக்கோஸ்ட் அரசாங்கம் கைதுசெய்துள்ளது.

தமது அங்கத்தவர்களே கைது செய்யப்பட்டதாகவும், கடத்தப்பட்டதாகவும் இரு பிரதான எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இதனிடையே பொது ஊர்வலங்களை சென்ற வாரம் அரசு தடை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல இனங்களைக் கொண்ட அரசு ஒன்று ஐவரிக்கோஸ்டில் ஆட்சியில் இருந்தும், முஸ்லிம்களைக் கொண்ட வடபகுதி தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலும், ஜனாதிபதி லோரனட் காபக்கோவின் ஆட்சியில் தென்பகுதியும் அமைந்துள்ளன.

# சோனியா - ரணில் நேற்று சந்தித்தனர்!

(கொழும்பு)


இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தியை, நேற்றுப் பிற்பகல் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், இலங்கை - இந்திய உடன்படிக்கையை அடையாளப் படுத்திக்கொண்டு இரண்டு நாடுகளுக்கிடையில், எதிர்கால உறவுகள் விரிவுபடுத்தப்படுவது குறித்தும், நேற்றைய சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் திருகோணமலையில் உள்ள எண்ணெய்தாங்கி தொகுதியை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியமை குறித்து, சோனியாகாந்தி தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, அமைச்சர் மிலிந்த மொறகொட, பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.



The Leading Daily of Tamils' Homeland

## மாகாணசபை வெற்றிடங்களுக்கு வேலையற்ற பட்டதாரிகள் நியமனம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

மாகாண சபைகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு, வேலையற்றிருக்கும் பட்டதாரிகளை நியமிப்பது என்று, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம் பெற்ற, வேலையற்ற பட்டதாரிகளைச் சந்தித்தபோது, இந்த உறுதிமொழியை வழங்கினார் 'மகாணசபை முதலமைச்சர்களுடன், அடுத்த இருவாரங்களில் பேச்சுக்கள் நடாத்திய பின்னர்- பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி செயலக அதிகாரிகள், வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர்.

## புலிகளின் தீர்வு யோசனை...

யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சமாதான நடவடிக்கைகள் விரைவில் தொடங்கவேண்டுமென்று இந்தியா கூறியுள்ளது.

தற்போதைய தேக்கநிலைக்கு ஒரு தீர்வை இந்தியா வரவேற்கும். ஜுலை மாதம் இலங்கை அரசு அளித்த யோசனைகளுக்கு விடுதலைப் புலிகளின் பதில் நியாயமானதாகவும் விரிவாகவும் இருக்குமென்று இந்தியா எதிர்பார்க்கிறது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவிற்கான மூன்று நாள் பயணமுடிவில் புதுடில்லியில் நேற்று விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை பலமாக எதிர்க்கவேண்டும். எந்தவொரு பயங்கரவாத இயக்கத்துக்கும் நிதியுதவியோ அடைக்கலமோ அளிக்காது ஐ.நாவின் தீர்மானத்தை முழுமையாகச் செயற்படுத்தவேண்டும் என்றும் இந்த இரு நாடுகளும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் பயிற்சி, ஒத்துழைப்பு, இலங்கை பாதுகாப்பு படைகளுக்கு போர்த்தளபாடம் வழங்கல் போன்றவை பேச்சுவார்த்தையில் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்று உருவாக்குவதற்கு பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரும் இணங்கியிருக்கின்றனர்.

இரு நாடுகளினதும் கடற்பிரதேசங்களுக்குள் பிரவேசிக்கின்ற மீனவர்கள் மனிதாபிமானமாக அனுதாபத்துடன் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் விமானப் போக்குவரத்து அதிகரிக்கப்பட்டதற்கு அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். கொழும்பையும் கேரளாவையும் இணைக்கின்ற கப்பல் சேவையை நடத்துவதற்கும் பிரேரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவத்தினரை....

சந்திப்பு, நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

காலை 11 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெற்ற இந்தச் சந்திப்பினை கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த கெறீனா ஏற்பாடு செய்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் இமையவன், பாலையா, கவியன்பன் ஆகியோரும், படைத்தரப்பில்- யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொனசேகாவும் அவரது உதவியாளர்களும் கலந்து கொண்டனர்.

அண்மைக்காலமாக, இராணுவ வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களின்போது, அதனுடன் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர், இறந்த பொதுமக்களின் உடல்களை அப்புறப்படுத்தியும், அதனுடன் தொடர்புடைய வாகனங்களை அகற்றுவதுமே பொதுமக்களுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணுகிறது.

சட்டம், ஒழுங்கைப் பேணவேண்டிய பொலிஸாரும்- இராணுவத்தினருடன் சேர்ந்து தடயங்களை அகற்றும் நடவடிக்கை பொதுமக்களை சீண்ட வைக்கிறது. எனவே, இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாமல் தவிர்க்கவேண்டும்.

அத்துடன், மாணவர்கள் கல்வி கற்கும் சூழலையும், ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் சூழலையும் இராணுவம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பாடசாலைகளுக்குள்ளும், அருகிலும் இருக்கும் முகாம்கள், காவலரண்களால் கல்விச் செயற்பாடுகள் மகிழ்ச்சிகரமானதாக அமையவிலலை. இதனால், கல்வித்தரம் குறைவடைவதையும் அவதானிக்க முடிகிறது.

எனவே, இராணுவ நெருக்குவாரங்கள் தவிர்க்கப்படவேண்டும். இதன் மூலம் - மாணவர்களது கல்விச் சூழல் நன்றாக அமைய இராணுவம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி போன்ற பாடசாலைகளில் இராணுவ நெருக்குவாரங்கள் அகற்றப்படவேண்டும்.

- இவ்வாறு, விடுதலைப் புலிகளால் இராணுவத்தரப்புக்குத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த சரத் பொன்சேகா, பாடசாலைகளுக்கு அருகிலுள்ள மற்றும் பாடசாலைகளில் உள்ள முகாம்களையும், காவலரண்களையும் தற்போதைய சூழ்நிலையில் அகற்றமுடியாது. இராணுவ வாகன விபத்துக்கள் தொடர்பான விசாரணைகளை, பொலிஸாரே நடத்தவேண்டுமெனவும் தெரிவித்தார்.

## செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவம்...

தாக்கப்படுவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்ததாவது,

எந்த ஊடகத்துறையையும் தாக்கும் எண்ணம் இராணுவத்தினருக்கு ஒருபோதும் கிடையாது. சில ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுகின்றன. செய்தியைத் திரித்துக் கூறுவதன் மூலம் இராணுவத்தினருக்கு எதிராக மக்களை தூண்டுகின்றன. இதன் மூலமாக உண்மை நிலையை அறிய முடியாதுள்ளது.

ஊடகவியலாளர்களும் சில வெளி அழுத்தங்களின் காரணமாக உண்மைகளை வெளிக்கொணராமல் இருக்கலாம். இதனுடைய மறுபக்கத்திலே பாதுகாப்புப் படையினருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு பாதிக்கப்படுகின்றது.

இதற்கு ஆதாரமாக கடந்த மாதங்களில் வெளிவந்த செய்திகளை நான் உங்களிற்கு குறிப்பிட்டுச் சொல்ல முடியும். சுயாதீனமாக எதுவித அழுத்தங்களும் இன்றி செயற்பட ஊடகவியலாளர்கள் முன்வர வேண்டும்.

ஊடகவியலாளர்கள் சிலர் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். அவை வன்முறை நடைபெற்ற இடங்களிலேயே இடம்பெற்றுள்ளன. இவ்வாறான சீந்தர்ப்பங்கள் தவிர்க்க முடியாதவை..

இராணுவத்தினர் ஆகக் குறைந்த தமது பலத்தையே பிரயோகித்துள்ளார்கள். கண்ணீர் புகைகுண்டு, தடியடி போன்றவற்றை மட்டுமே நிகழ்த்தியுள்ளனர். ஒருபோதும் அவர்கள் மக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை.

சில ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டது பற்றி பல செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் இச்சம்பவங்களில் படையினர் தாக்கப்பட்டுள்ளார்கள். அது பற்றிய செய்திகள் மிகக் குறைவாகவே வெளிவந்தன.

வன்முறையில் ஈடுபடும் கும்பலுடன் சேர்ந்து ஊடகவியலாளர்கள் நிற்கும்போது அடையாளம் காண்பது படையினருக்கு சிரமம். அதே வேளை, வன்முறைச் சம்பவங்களின் போது தம்மை படம்பிடிப்பதை இராணுவத்தினர் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். வன்முறைச் சம்பவங்களின்போது செய்தி சேகரிக்கும் செய்தியாளர்கள், முன்கூட்டியே அறிவிப்பது இவ்வாறான அசம்பாவிதங்கள் நடப்பதை தடுக்கும்.

சில வேளைகளில் நீங்கள் ஒரு குழுவாகக் கூட இயங்கலாம். அது பற்றி நிச்சயமாக எமக்கு அறிவிக்க வேண்டும். உங்கள் கடமையை செய்ய படையினர் தடையாக இருக்கக் கூடாதென நீங்கள் எதிர்பார்ப்பது போல படையினரும் தங்கள் கடமையைச் செய்யத் தடையாக இருக்காதீர்கள். இராணுவத்தினர் தொடர்பான செய்திகளை பெறுவதற்கு இணைப்பாளர் ஒருவரை நியமிக்க முடியுமா எனக் கேட்டதற்கு, அது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுத்தான் முடிவெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (111,202)

### பின்லாந்து...

திரட்டுவதே தமது சந்திப்பின் நோக்கம் என, பின்லாந்து நாட்டுத் தூதுவர் தெரிவித்தார்.

இது குறுகியகால பயணமாக அமைந்துள்ளதால், கொழும்பில் ஒருநாள் தங்கி அரசியல் பிரதிநிதிகளையும் சந்தித்து விபரங்களைத் தான் திரட்டவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

### மட்டு.போதனா...

குறைவாகவும், ஆரோக்கியமில்லாமலும் இருப்பதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார். எனினும், நோய் தொற்றாமல் இருப்பதற்கும், பாதுகாப்பிற்குமாக குழந்தைகள் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குழந்தைகளைப் பிரசவித்த தாய் மகப்பேற்று விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு ஏற்கனவே 3 பிள்ளைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

### முக்கிய...

வரத்து, உல்லாசப் பயணம், வெளிநாட்டு முதலீடு அத்துடன் மற்றும் பல வர்த்தக நடவடிக்கைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இதுவரையில், இவ்வாறானதொரு ஒப்பந்தம் -இலங்கை எந்தவொரு நாட்டுடனும் செய்துகொள்ளவில்லை எனவும், இது ஒரு வித்தியாசமான ஒப்பந்தம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு தொடர்பான உடன்பாட்டில் - இலங்கை பாதுகாப்புப் படையினரைச் சேர்ந்தோர் இந்தியாவில் பயிற்சி பெறவும், இலங்கையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிலை நிறுத்துவது குறித்தும் இந்த ஒப்பந்தங்களில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1557 திகதி: 21.10.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Q | 4 | 2 | 8 | 5 | 6 | 5 |

SINHALA GATEWAY BY MR. MALWANA

சிங்கள மொழியைப் பேச / எழுத / வாசிக்க மூன்றே மாதங்களில் பயிற்சி பெறலாம்.

வழிகாட்டல் ஆசிரியர்

திரு. மல்வான

நேரில் வாருங்கள் (சி.1713)

இல.56, அம்மன் வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

யாழ் நகரில்

விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!

1.பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2.நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3.டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4.அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்

ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.

Vista Vision

விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப், 52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.

☎:021-2225187

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.